பக்கங்கள்: 12 | விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 05 புதன்கிழமை 21.07.2021 கதிர் 258

### இது ரகசியம் அல்ல!

வடக்கின் பிரதம செயலாளர் நியமனம் வடக்கு நிர்வாக அதிகாரிகள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அந்தப் பதவிக்கு வடக்கில் பன்னிரண்டு அரச நிர்வாக அதிகாரிகள் அப்பதவியைப் பெறுவதற்குத் தகுதி நிலை பக்கம்02 »

# நான்காவது அலையை நெருங்கும் இலங்கை



## கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரிப்பு; மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொரோனாவின் நான்காவது அலையை இலங்கை நெருங்கி வருகின்றது என மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார். ☞2

## யாழில் 28 பேருக்கு நேற்று கொரோனா

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த 23 பேர் உட்பட வடக்கில் 31 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

369 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய யாழ். மாவட்டத்தில் 23 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 02 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் ஒருவருக்கும், மன்னார் மாவட்டத்தில் 02 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ☞2

## ரிஷாத் வீட்டில் பணியாற்றி உயிரிழந்த சிறுமி தொடர்ச்சியாகத் துஷ்பிரயோகத்துக்கு இலக்கு



### சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார் என சபையில் அமைச்சர் சரத் வீரசேகர தகவல்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணியாற்றி தீயில் எரிந்து உயிரிழந்த சிறுமி தொடர்ச்சியாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். ☞2

## சிறுமிக்கு நீதி கிடைக்க ரிஷாத் எம்.பி. பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### நாடாளுமன்றில் கூட்டமைப்பு வலியுறுத்து

பணிப் பெண்ணாக வேலைக்கு அமர்த்தப்பட்ட நிலையில் மரணித்துள்ள சிறுமிக்கு நீதி கிடைக்க ரிஷாத் பதியுதீன் எம்.பி. முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. கோவிந்தன் கருணாகரம் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான ☞2

## வவுனியாவில் வானில் வந்தவர்களால் பெண் ஒருவர் கடத்தப்பட்டு விடுதலை!

(வவுனியா நிருபர்)


வவுனியாவில் வெள்ளை வான் ஒன்றில் வந்தவர்களால் பெண் ஒருவர் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை வவுனியா, கோவில்குளம் பகுதியில் உள்ள அகிலாண்டேஸ்வரர் சிவன் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டு விட்டு வீடு நோக்கிய திரும்பிய முதிய பெண் ஒருவரை வெள்ளை வான் ஒன்றில் ஆலயம் முன்பாக வந்த நபர்கள் அழைத்துள்ளனர்.

இதன்போது, குறித்த பெண் வான் அருகில் சென்றபோது அவர்கள் குறித்த பெண்ணை வானில் இழுத்து ஏற்றிக்கொண்டு சென்றுள்ளனர்.

குறித்த பெண்ணை சுமார் இரண்டு ☞2

## காங்கேசன்துறை கடலில் மிதந்த 135 கிலோ கஞ்சா



யாழ்., காங்கேசன்துறை கடற்பரப்பில் மிதந்து வந்த 135 கிலோ கஞ்சா போதைப் பொருளை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் மர்மப் பொதி ☞2

## மேலும் 43 பேர் மரணம்

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 43 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 26 ஆண்களும், 17 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் ☞2

## இலங்கையில் நேற்று 1,511 பேருக்கு தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று 1,511 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 87 ஆயிரத்து 930 ஆக எகிறியுள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 980 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 62 ஆயிரத்து 828 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 21 ஆயிரத்து 232 பேர் சிகிச்சை பெறுகின்றனர்.

### மடு ஆயர் இல்லக் காணிப் பிரச்சினையினால்

## பதவியிலிருந்து பந்தாடப்படுகிறார் வடக்கு மாகாண காணி ஆணையர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுலை 21

மன்னார் மடுப் பிரதேசத்தில் ஆயர் இல்லம் தொடர்புபட்ட ஒரு நிலம் தொடர்பான சர்ச்சையை அடுத்து வடக்கு மாகாண காணி ஆணையாளர் உட்பட பலர் தத்தம் பதவிகளிலிருந்து பந்தாடப்படுகின்றனர்.

பண்டிவிரிச்சானில் கோயில் மோட்டையில் உள்ள 49 ஏக்கர் காணிக்கு ஆயர் இல்லம் உரிமை கொண்டாடி வருகின்றது. இது தொடர்பில் காணிப் பயன்பாட்டுக் குழு எடுத்த தீர்மானம் மட்டும் உண்டு. ஆனால் ஆயர் இல்லத் தரப்பிடம் இந்த நிலத்துக்கு உரிமை கொண்டாட வரைபடமோ அல்லது காணி அனுமதிப் பத்திரமோ கிடையாது. இந்த வயல் காணியில் அப்பகுதிப் பொது மக்கள் நீண்ட காலமாக ஆண்டுதோறும் வயல் செய்து வருன்றனர். ☞2

## இணுவிலில் இரவு வீடு புகுந்து தம்பதியினர் மீது வாள்வெட்டு!

### இருவரும் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., இணுவில் காரைக்கால் பகுதியில் வாள்வெட்டு வன்முறைக் கும்பல் நடத்திய தாக்குதலில் குடும்பத் தலைவரும் அவரது மனைவியும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மகனைத் தேடி ☞2

## யாழில் நேற்றும் ஒருவர் கொரோனோவால் சாவு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜுலை 21

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குருநகரைச் சேர்ந்த 75 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று வரை 116 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யில் உள்ளனர். அவர்களை எல்லாம் புறக்கணித்து, உதாசீனம் செய்துவிட்டு ஒரு ஜுனியரை வவுனியா மாட்ட அரச அதிபர் பதவியிலிருந்து பிரதம செயலாளர் பதவிக்கு அரசு நியமித்திருக்கின்றது.

இந்த பன்னிருவரில் ஒருவருக்குக் கூட அந்த நியமனத்தை வழங்க முடியாது என்றால் குறைந்த பட்சம் இதுவரை இருந்தவருக்காது ஆறு மாதங்களோ, ஒரு வருடமோ நீடிப்புக் கொடுத்திருக்கலாம் – இப்போது கிழக்கு மாகாணத்திலும், ஊவா மாகாணத்திலும் கொடுத்திருப்பதைப் போல.

இருக்கின்ற ஒன்பது மாகாணங்களிலும் பிரதம செயலாளர்களும் சிங்களவர்கள். ஒன்பது மாகாணங்களின் ஆளுநர்களில் எண்மர் சிங்களவர்கள். தமிழரான வடக்கு மாகாண ஆளுநரும் எந்நேரமும் மூடை முடிச்சுகளைக் கட்டும் நிலையில்தான் இருக்கின்றார்.

தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவே மாகாண சபை முறைமையே கொண்டு வரப்பட்டது என்று கூறுகின்றார்கள். ஆனால் இன்று அது தமிழர் பிரதேசத்தைச் சிங்களமயப்படுத்தவும், பகிர்ந்தளிதவை என இந்தியாவுக்கும் சர்வதேசத்துக்கும் பம்மாத்துக் காட்டிய அதிகார விடயங்களை மீண்டும் பிடுங்கி எடுக்கவும் பயன்படுத்துகின்றது அரசு என்பதுதான் நிலைமை.

ஆனால் யார் எக்கேடு கெட்டால் என்ன, நமக்குப் பிடுங்கியது லாபம் என்று கருதுவோர் இந்த நியமனத்திலும் கூட வழமை போல தமது கைவரிசையைக் காட்டத் தவறமாட்டார்கள்.

நேற்று மாலை புதிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள், மாகாண, ஆளுநர்கள், மாவட்டச் செயலாளர்கள் (அரச அதிபர்கள்) ஆகியோரின் கூட்டம் ஒன்றை அலரி மாளிகையில் நடத்தினர். வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் நியமனத்தைப் பெறும் பந்துசேன வவுனியா அரச அதிபர் என்ற முறையில் கூட்டத்துக்கு வந்திருந்தார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் பதவியை பந்துசேனா பெறுகின்றார் என்ற தகவல் அந்தக் கூட்டத்திடையே பரவிய போது, நமது அமுல்பேபி விரைந்து சென்று அவருடன் சேர்ந்து அங்கு ஒரு படத்தை எடுத்துக் கொண்டார். உடனேயே தமது முகப்புத்தகத்திலும் அந்தப்படத்தை ஏற்றிக் கொண்டார்.

வடக்கு மாகாணத்தில் புதிய பிரதம செயலாளரின் படம், அவரது நியமனம் பற்றிய அறிவிப்பு வெளியான கையோடு, அமுல்பேபியுடன் சேர்ந்து வந்திருக்கின்றது. ஆகவே அவரையும் அந்தப் பதவிக்கு நியமித்தவர்கள் நாங்கள்தான், பாருங்கள் எங்கள் 'பவரை'.... என்று அமுல்பேபி தரப்பு இனி விரைந்து பிரசாரத்தை முன்னெடுக்கும்.

இந்த நியமனம் பேரினவாத ஆக்கிரமிப்பு. ஆனால் அது பற்றி எல்லாம் சிந்திக்காமல், இதுவும் கூட தன்னால்தான் நடந்தது என்று அமுல்பேபி தரப்பு பீற்றிக் கொள்ளும் – இருந்து பாருங்கள்.

கலியாண வீடு என்றால் தான்தான் மாப்பிள்ளை, செத்த வீடு என்றாலும் தான்தான் பிரேதம் என்றும் எதிர்பார்க்கும் தரப்பு இப்படித்தான் நடக்கும். அது அதன் பரவணிப் பண்பியல்புப்போக்கு. அது மாற்ற முடியாதது.

– மின்னல் –

## யாழில் 28 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இவர்களுடன் பம்பைமடு தனிமைப் படுத்தல் நிலையத்தில் 03 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## ரிஷாத் வீட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து, நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், அநுரகுமார திஸாநாயக்க மற்றும் வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஆகியோர் சபையில் கேள்வி எழுப்பினர்.

சிறுமியின் மரணம் தொடர்பாக மீண்டும் பிரேத பரிசோதனை மேற்கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை எந்த மட்டத்தில் உள்ளது என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சரத் வீரசேகர –

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிபுரிந்த குறித்த 16 வயது சிறுமி, எரியுண்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் எரிகாயங்களால் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், குறித்த சிறுமி தொடர்ச்சியாகப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர்.

குறித்த சிறுமியின் வீட்டுக்குச் சென்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அனைத்து விசாரணைகளும் துரிதமாக இடம்பெறுகின்றன – என்றார்.

## பதவியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதற்குரிய குந்தகையை ஆயர் இல்லத்துக்கு வழங்குகின்றனர்.

கடந்த ஆண்டு இந்த வயலில் தாங்களே விவசாயம் செய்யப்போகிறார்கள் என மதகுருமார் கூறியபோது மக்கள் முரண்பட்டனர்.

இதில் 27 குடும்பங்கள் இந்த வயலை விதைத்து பயன்பெற்று வந்துள்ளன. இந்த விடயம் அன்று முதல் மாகாண காணி ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இதனால் இந்த விடயத்திற்கு தீர்வு வழங்க மாகாண காணி ஆணையாளரான குகநாதன் அந்த இடத்தில் ஏனைய காணிகளுடன் சேர்த்து வயல் செய்த மக்களிற்கு இரு ஏக்கர் வீதம் நிலத்தை வழங்கி, மிகுதி 25 ஏக்கரையும் ஆயர் இல்லத்திற்கு வழங்கலாம் என அறிக்கையிட்டார்.

இதற்கு ஆயர் இல்லம் இணங்கவில்லை. இதனால் ஆளுநர் உதவி ஆணையாளரை அனுப்பி பார்வையிட்டு அறிக்கை பெற்றார். இருந்தபோதும் தீர்வு கிட்டாத நிலையில் ஆயர் இல்லம் தமது வசம் 50 வருடமாக இருந்த நிலத்தை எவ்வாறு மக்களிடம் வழங்குவது எனத் தெரிவித்து மத்திய காணி ஆணையாளரின் கவனத்திற்கு விடயத்தைக் கொண்டு சென்றது.

இதனை ஆராய்ந்த மத்திய காணி அமைச்சின் ஆணையாளர் மாகாண காணி ஆணையாளரின் சிபார்சை நடைமுறைப்படுத்துமாறு எழுத்தில் அறிவித்துள்ளார். அதற்கமைய நடவடிக்கை எடுக்க முற்பட்ட வடக்குக் காணி ஆணையாளர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வடக்கு மாகாண பேரவைச் செயலகத்திற்கு பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாகாணக் காணி ஆணையாளராக சோதிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம் மடுப் பகுதி காணி உத்தியோகத்தர் வவுனியா மாவட்டத்திற்கும் வவுனியா உத்தியோகத்தர் மடுவிற்கும் ஏற்கனவே மாற்றப்பட்டுள்ளனர். மடு பிரதேச உதவிச் செயலாளரையும் மாவட்டத்தை விட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

# மாலைதீவு ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம்



உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹீம் மொஹமட் இலங்கை வந்துள்ளார்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் மூலம் அவர் கட்டுநாயக்க விமானத்தை வந்தடைந்தார்.

அவருடன் 15 பேர் கொண்ட அதிகாரிகள் குழுவொன்றும் இலங்கை வந்துள்ளது.

மூன்று நாள்களுக்கு இலங்கையில் தங்கியிருக்கும் மாலைதீவு ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர், கொழும்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட அரச உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர்.

## காங்கேசன்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஒன்று மிதந்துள்ளது. அது தொடர்பில் அறிந்த கடற்படையினர் குறித்த பொதியை மீட்டு சோதனையிட்ட போது, அதனுள் கஞ்சா பொதி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது.

குறித்த பொதியை கரைக்கு எடுத்து வந்த கடற்படையினர் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இணுவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வந்த நிலையில் அவர் வீட்டில் இல்லாமையால் தந்தை மற்றும் தாயைத் தாக்கிவிட்டு வன்முறைக் கும்பல் தப்பித்துள்ளது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றது.

சம்பவத்தில் ஜெயக்குமார் மற்றும் அவரது மனைவி ஜெயக்குமாரி ஆகிய இருவரும் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்துள்ளது.

இவர்களில் 30 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவரினதும், 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்ட 09 ஆண்களினதும், 02 பெண்களினதும் மரணங்கள் பதிவாகியுள்ளன.

அத்துடன் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 16 ஆண்களினதும் மற்றும் 15 பெண்களினதும் மரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 870 ஆக அதிகரித்துள்ளது.

## வவுனியாவில் வானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மணித்தியாலத்துக்கு மேலாக வானில் கொண்டு சென்ற குறித்த நபர்கள் மதியமளவில் பெண் அணிந்திருந்த 3 பவுண் காப்பைக் கழற்றி விட்டு பெண்ணை மடுகந்தை பகுதியில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

அங்கிருந்து, தமக்கு நடந்த சம்பவம் தொடர்பில் குறித்த பெண் உறவினர்களுக்குத் தெரியப்படுத்தியதுடன், ஓட்டோ ஒன்றில் வவுனியா பொலிஸ் நிலையம் சென்று, தாம் கடத்தப்பட்டமை தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, கடத்தப்பட்டபோது குறித்த பெண் சங்கிலி, காப்பு, மோதிரம், தோடு உட்பட 9 பவுண் நகைகளை அணிந்திருந்தபோதும் வானில் கடத்தியவர்கள் 3 பவுண் காப்பை மட்டுமே கழற்றி விட்டு பெண்ணை இறக்கி விட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (100)

## சிறுமிக்கு நீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ரிஷாத் பதியுதீன் எம்.பியின் வீட்டில் மலையக சிறுமி ஒருவர் மரணித்திருக்கின்றார். பொறுப்பு வாய்ந்த ஒரு கட்சியின் தலைவர், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், ஒரு சமூகத்தை வழி நடத்துபவர் என்ற ரீதியில் ரிஷாத் பதியுதீன் எம்.பி. அந்தச் சிறுமிக்கு நீதி கிடைப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இதேவேளை, மன்னாரில் இருந்து இமானுவேல் எமாஞ்சலின் என்ற யுவதி விமானியாக முதல்கட்ட பயிற்சியை முடித்துள்ளார். அவருக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் ரெலோ சார்பிலும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம் – என்றார்.

## நான்காவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருத்துவமனை கட்டமைப்பு தொடர்பில் எமக்கு கிடைக்கின்ற தகவலின் அடிப்படையில் கொரோனா நான்காவது அலையின் முதல் பகுதியை நாம் அண்மித்து வருகின்றோம் என்பது இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் என்ற அடிப்படையில் நாம் மக்களுக்கு அறிவுறுத்துகின்றோம்.

கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காலத்தை போன்றே இக்காலப்பகுதியிலும் தேசிய மருத்துவமனைக்கு அதிகமான கொரோனா நோயாளர்கள் வருகை தருகின்றனர்.

நாள் ஒன்றுக்கு 200 நோயாளர்கள் வருகை தருகின்றனர். அவர்களில் 100 பேருக்கு ஒட்சிசன் தேவை காணப்படுகின்றது. கொழும்பு நகர சபைக்குள் 100 இற்கு 30 சதவீதமான டெல்டா தொற்றாளர்கள் உள்ளனர்.

டெல்டா தொற்றுக்குள்ளானவர்களின் எச்சிலில் இந்த வைரஸ் செறிவு அதிகமாக இருக்கும். இந்த டெல்டா திரிபு மிக வேகமாக ஒரு சில வாரங்களிலோ அல்லது ஒரு மாதத்துக்குள் நாடு முழுவதும் பரவலாம். இது நிச்சயம் தெரிந்த ஒரு விடயம்.

அதுமாத்திரமின்றி, மாகாணங்களுக்கிடையில் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள போதிலும் தொற்றாளர்கள் கணிசமான அளவு இனங்காணப்படுகின்றனர்.

பயணக் கட்டுப்பாட்டில் உள்ள குறைபாடுகளே இதற்குக் காரணமாகும் – என்றார்.

# யாழில் கடலட்டை பண்ணைகள் அமைப்பு தொடர்பாக அரசியல்வாதிகளின் கருத்து எதிர்காலத்தை பாதிக்கும்

## கடற்றொழிலாளர்கள் விசனம்




அரசியல் இலக்குகளை அடைந்துகொள்கின்ற நோக்கோடு அரசியல்வாதிகள் சிலரால் வெளிப்படுத்தப்படுகின்ற கருத்துக்கள் தங்களுடைய எதிர்காலத்துக்குத் தேவையற்ற அசௌகரியங்களை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தைத் தோற்றுவித்துள்ளதாக கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் கடலட்டைப் பண்ணைகளுக்கான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பணம் பெற்றுக்கொள்ளப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்த கருத்துக்குத் தமது அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் கடலட்டைப் பண்ணை உருவாக்கும் திட்டம் தொடர்பாக அண்மைக் காலமாக வெளியாகின்ற கருத்துக்கள் தொடர்பாகக் கிளிநொச்சியில் கருத்துத் தெரிவிக்கும்போதே கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்கள் –

கடலட்டைப் பண்ணை உருவாக்கம் என்பது அன்றாடம் காட்சிகளாகவும் பொருளாதார அடிமைகளாகவும் வாழ்ந்து வந்த எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற வரப்பிரசாதமாகவே கருதுகின்றோம்.

கடந்த காலங்களில் அனைத்தையும் இழந்து, நாதியற்றவர்களாக இருந்த எங்களுக்கு கடலட்டைப் பண்ணை உருவாக்கம் என்பது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியாலும் தற்துணிவான தீர்மானங்களாலும் கடந்த ஒன்றரை வருடங்களில் வடக்கு மாகாணத்தில் சுமார் 25 இற்கும் மேற்பட்ட பண்ணைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் நூற்றுக்கணக்கான கடலட்டைப் பண்ணைகளை அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் நக்டா நிறுவனத்தின் வடக்கு மாகாணத்துக்கான பிரதானி அண்மையில் தெரிவித்துள்ளார். இது உண்மையிலேயே மகிழ்ச்சியான செய்தியாகும்.

ஏனெனில், ஏற்கனவே இரணைதீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த எமக்கு இதுவரை 83 கடலட்டைப் பண்ணைகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் நூற்றுக்கணக்கானவர்கள் எமது பிரதேசத்தில் விண்ணப்பித்திருக்கின்றார்கள். அவர்களுக்கும் பண்ணைகள் வழங்கப்படுகின்ற பட்சத்தில் எமக்கான எதிர்காலத்தை நாம் வளமானதாக உருவாக்கிக் கொள்ள முடியும்.

நாங்கள் யுத்தத்தால் நாடோடிகளாக அலைந்து அனைத்தையும் இழந்து, நாளாந்த வாழ்கையில் எமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே திண்டாடிக் கொண்டு இருக்கின்றவர்கள்.

அப்படிப்பட்ட நாங்கள் தலா பத்து லட்சம் கொடுத்து கடலட்டைப் பண்ணைகளைப் பெற்றிருக்கின்றோம் என்று தெரிவித்திருப்பது வேடிக்கையாக இருக்கின்றது.

இவ்வாறான பொறுப்பற்ற முறையில் கருத்துக்களை வெளியிடுவதை நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் போன்றவர்கள் நிறுத்த வேண்டும். அவர்களிடம் நாம் மன்றாட்டமாக கேட்கின்றோம். தயவு செய்து வைக்கோல் பட்டடை நாய்கள் போன்று செயற்படாதீர்கள்.

உங்களால் செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை. ஏனையவர்கள் செய்வதை இடையூறு செய்யாமல் இருங்கள்.

நீங்கள் அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்காக வெளியிடுகின்ற இவவாறான கருத்துக்களால், கடலட்டைப் பண்ணை உருவாக்கம் தடைப்படுமானால், விண்ணப்பித்துவிட்டு பண்ணைகளுக்காகக் காத்திருக்கின்ற நூற்றுக்கணக்கானோரின் வாழ்வாதாரத்துக்கான மாற்றுத் திட்டம் உங்களிடம் என்ன இருக்கின்றது? என்று கேட்க விரும்புகின்றோம்' என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# கல்வி அமைச்சருடன் நடத்திய பேச்சு தோல்வி ஆசிரியர் சங்கங்களின் போராட்டம் தொடர்கிறது

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களது தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கல்வி அமைச்சருடன் நடத்திய பேச்சு தோல்வியடைந்துள்ளதாக ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் இணையவழி கற்பித்தலைத் தொடர்ந்தும் புறக்கணிக்க தீர்மானித்துள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

சம்பளம் மற்றும் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் இணையவழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து விலகி வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டம் நேற்று 9 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே, இந்த விடயம் தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.

இந்த சந்திப்பில், தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை, பேச்சுக்கள் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன. எமது போராட்டம் தொடர்கிறது. இணையவழிக் கல்வியைத் தொடர்ந்து புறக்கணிப்போம். எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளேதாம் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

# பொலித்தீன் பைகள் மீதான தடை 2022 ஜனவரி முதல் அமுலுக்கு!

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பொலித்தீன் பைகளை தடை செய்வதற்கான முதல் கட்ட திட்டத்தை அமுல்படுத்துமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர மத்திய சுற்றுச்சூழல் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க சுற்றுச்சூழல் அமைச்சு மேற்கொண்ட திட்டத்தின் பிரகாரம் இந்த முன்மொழிவு செய்யப்பட்டது.

2022 ஜனவரி முதல், 10 அங்குல அகலம், ஐந்து அங்குல ஆழம் மற்றும் 16 அங்குல உயரம் அல்லது அதற்கும் குறைவான பொலித்தீன் பைகளுக்குத் தடை விதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்குப் பின்னர் மாற்று திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த சுற்றுச்சூழல் அமைச்சர், மாற்று வழிகள் இல்லாவிட்டாலும் தடை அமுல்படுத்தப்படும் எனக் கூறினார்.

இலங்கையில் ஆண்டுதோறும் இரண்டு பில்லியனுக்கும் அதிகமான பொலித்தீன் பைகள் பயன்படுத்தப்படுகின்றன என சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

# ரிஷாத்தின் வீட்டில் பணிபுரிந்த சிறுமியின் மரணத்துக்கு நீதிகோரி யாழில் போராட்டம்



நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 15 வயது சிறுமியின் இறப்புக்கு நீதி கோரி யாழில் தனிநபர் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக மலையகத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முதல் இவ்வாறு கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்.

தனது தங்கையின் இறப்பிற்கு நீதி வேண்டும், ஜனாதிபதி குறித்த சிறுமியின் உயிரிழப்பு தொடர்பாக நேரடியாக தலையிட்டு சிறுமியின் இறப்புக்கு நீதி பெற்றுத்தர வேண்டும், சிறுமியின் மரண விசாரணை அறிக்கை நேரடியாக ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# மாலைத்தீவு ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கு விஜயம்



மாலைதீவின் ஜனாதிபதி இப்ராஹிம் முகமது சோலிஹ் உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

மூன்று நாள்கள் விஜயம் மேற்கொண்டு அவர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 11.30 மணியளவில் நாட்டை வந்தடைந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் 15 மூத்த அதிகாரிகளுடன் வந்த இந்த தூதுக்குழு இந்த மாதம் 23 ஆம் திகதி மாலைதீவுக்குத் திரும்ப திட்டமிடப்பட்டுள்ளது.

# சுற்றுலாப் பயணிகளுக்காக நாடு ஓகஸ்ட் முதலாம் திகதி திறப்பு

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக நாட்டைத் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

நாடு முழுமையாகத் திறக்கப்பட்டதும் ஒரு நாளைக்கு 500 முதல் 1,000 வரையான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என சுற்றுலாத்துறை அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

கொரோனாத் தொற்று பரவல் காரணமாக மூடப்பட்டிருந்த நாட்டின் எல்லைகள் மீண்டும் திறக்கப்பட்டதிலிருந்து, 18 ஆயிரத்து 200 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதன் காரணமாக நாட்டுக்கு கிட்டத்தட்ட 40 மில்லியன் டொலர் வருமானத்தை ஈட்ட வழிவகுத்தது என அமைச்சால் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

இதேவேளை சுற்றுலாத் துறை அபிவிருத்தி தொடர்பாக நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மேலும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட சுற்று லாத் துறையில் பணியாற்றுவோரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரே வழி, நாட்டைத் திறந்து சுற்றுலாத் துறையை மீட்டெடுப்பதே என்றும் அவர் கூறினார்.



ஆகவே இலங்கையின் மீது பயணத் தடைகளை விதித்துள்ள அந்த நாடுகளின் தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்துரையாட சுற்றுலாத்துறை அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல சுத்திகரிப்பு பொருள்களை உற்பத்தி செய்யும் எமது நிறுவனத்திற்கு கிளிநொச்சி,மன்னார்,வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களிற்கு தகுதியான முன் அனு பவமுள்ள விற்பனை பிரதிநிதிகள் தேவை.

தொடர்புகளுக்கு – 077 844 4951
077 816 2637
021 221 4520

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தொடரும் பயங்கரவாதம்

**இலங்கையின் வரலாற்றிலும், உலகின் பார்வையிலும் மிக, மிக மோசமான – நாகரிக உலகுக்குப் பொருந்தாத – காட்டுமிராண்டித்தனமான – சட்டம் ஒன்று இருக்கும் என்றால் அது பயங்கரவாதத் தடைச் சட்டம்தான்.**

**அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு நேற்று முன்தினம் 42 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன.**

**இது முதலில் தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாகத்தான் கொண்டு வரப்பட்டது. மூன்று ஆண்டுகள் கழித்து நிரந்தரச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.**

**1979 ஜூலை 19ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு அப்போதைய நிதி அமைச்சர் கே.டபிள்யூ. தேவநாயகம் இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். சுமார் பத்து மணித்தியாலங்கள் மட்டும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அன்றிரவே 10.45 மணிக்கு அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது இந்தச் சட்டம்.**

**அவசரமாகக் கொண்டு வரப்பட்டு, அவசர அவசரமாக விவாதிக்கப்பட்டு, குறுகிய கால விவாதத்தோடு நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டம் நாற்பத்தியிரண்டு ஆண்டுகள் தாண்டியும் தனது கோரப்பிடியை பற்றியபடி அழிச்சாட்டியம் பண்ணியவாறு நிற்கின்றது.**

**நீதித்துறையின் அடிப்படைக் கோட்பாடுகளை – மாண்புகளை – தூக்கிக் கடாசிவிட்டு நிறைவேற்றப்பட்ட சட்டம் இது.**

**சட்டத்தின் பெயரால் எதேச்சாதிகாரம் நிலைநிறுத்தப்பட வழி செய்த ஏற்பாடு இதுதான்.**

**இலங்கையின் நீதிமுறைமையையே உலகின் முன் ஏளனப் பார்வைக்கும் பரிகாசத்துக்கும் உட்படுத்தி நிற்கும் பிரதான காரணியும் இதுதான்.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியபடி இந்த நாட்டில் சித்திரவதைகளைத் தேசியப் பண்பியல்பாக்கி, அரசையும், ஆட்சிமுறையையும் கேலிக்கூத்தாக்கிய சிறப்பு இந்தச் சட்டத்துக்கே உரியதுதான்.**

**பயங்கரவாதத்தை அரச பயங்கரவாதத்தால் அடக்குதல் என்ற பிரகடனப்படுத்தப்படாத – பிற்போக்குத்தனமான – கேலிக் கூத்தான – ஒரு கொள்கைப் போக்கை நடைமுறைப்படுத்துவதற்காக அரச பயங்கரவாதத்துக்கு சில விடயங்களை சட்ட அங்கீகாரம் கொடுக்கும் மிக மோசமான கொடுங்கோல் சட்ட ஏற்படாக இது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது என்பதுதான் வரலாற்றுப் பட்டறிவாகும்.**

**பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சிப் பீடம் தமிழர்களுக்கு எதிராக – தமிழ் இளைஞர்களுக்கு எதிராக – தான் ஏவி விட்ட இந் தச் சட்டத்தை தமிழர் ஒருவர் மூலமே நாடாளுமன்றத்தில் சமர் பிக்கச் செய்தது.**

**அச்சமயம் கல்குடா எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த கே.டபிள்யூ. தேவநாயகம் கோடரிக் காம்பானார். தமிழர்களின் கண்களை தமிழர்களின் விரல்களைக் கொண்டே குத்தும் அந்தக் குரூரத்தனத்தை அரசியலில் கிழட்டு நரி என விமர்சிக்கப்படும் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முன்னெடுத்தார்.**

**அப்போது நம்மவர் தேவநாயகம் சமர்ப்பித அந்தச் சட்டமூலமே நின்று கொல்லும் சனியாக இன்றும் நீடிக்கின்றது.**

**அரச படைகளின் தடுப்புக் காவலில் அச்சுறுத்தல்கள், சித்திரவதைகள், மனித நேயமற்ற கொடூரங்களை மேற்கொண்டு பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எதிரான சான்றாதாரமாகப் பயன்படுத்தி, அதனடிப்படையில் எதிரியைக் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கும் கொடூர (அ)நிதி முறைமைக்கு இந்தச் சட்டம் வழி செய்கின்றது.**

**புலன்விசாரணை என்ற பெயரில் சித்திரவதையை மறைபொருளாக முன்னெடுக்க சட்ட ரீதியான அந்தஸ்தைக் கொடுத்தது இந்தக் கேவலச் சட்டம்.**

**இந்தச் சட்டம் இரண்டு வகையில் இலங்கைத்தீவுக்குப் பின்னடைவைத் தந்தது.**

**ஒன்று – சித்திரவதைகள் மூலம் குற்றவாளிகளைத் தீர்மானிக்கும் ஒரு கொடூர முறைமைக்குச் சட்ட அங்கீகாரம் அளிக்கும் கேவலத்தை இது நியாயப்படுத்தியது.**

**அடுத்தது – புலன் விசாரணைக்கு ஒரே வழி சித்திரவதையும் துன்புறுத்தலும்தான் என்ற அடிப்படையில் அதற்கு சட்ட ரீதியாகக் கதவைத் திறந்து விட்டது இந்தச் சட்டம். அதனால் புலன்விசாரணையாளர்கள் தங்கள் திறமையைப் பொத்திக் கொண்டு குறுக்கு வழியில் – இலகுமுறையில் – விசாரணைகளை முன்னெடுத்தனர். சித்திரவதைகள் மூலம், குற்றங்களுக்கு யார் யாரையோ பொறுப்பாக்கி விட்டு, தம் வேலை முடிந்தது என்று அவர்கள் பதுங்கிக் கொண்டனர்.**

**இதனால், 'பயங்கரவாதம்' என்று அரசு அடையாளம் கண்ட 'குற்றங்களை' இழைத்தோர் வெளியில் சுதந்திரமாக நடமாடி, மேலும் மேலும் அதே செயல்களைப் புரிந்து, ஆட்சிப் பீடத்துக்குத் தொல்லை கொடுக்க, குற்றமிழக்காத அப்பாவிகள் பலர் அக்குற்றங்களுக்குப் பொறுப்பாக்கப்படும் அநீதி தொடர்ந்தது; தொடருகின்றது.**

**ஆக, 42 ஆண்டுகளாக அரச பயங்கரவாதமாக நாட்டை மேய்கின்றது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம். அதுதான் உண்மை.**

# மலையகச் சிறுமியின் மரண விசாரணை; ரிஷாத் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்



மலையகச் சிறுமியின் மரணம் குறித்த விசாரணைகளுக்கு ரிசாத் பதியுதீன் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

கடந்த வாரம் மலையகச் சிறுமி நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டிலே எரியுண்டு மரணித்திருக்கிறார்.

பொறுப்புவாய்ந்த ஒரு கட்சியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், சமூகத்தை வழி நடத்துபவர் என்ற ரீதியில் மலையகச் சிறுமியின் மரணம் குறித்த விசாரணைகளுக்கு ரிஷாத் பதியுதீன் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சீனாவிடமிருந்து மேலும் கடனை பெறுவதற்கு அரசு முயற்சி



சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்படவுள்ள 20 கோடி அமெரிக்க டொலர் கடனை 50கோடி டொலராக அதிகரிக்க நடவடிக்கை இடம்பெற்று வருவதாக நிதி அமைச்சின் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை எதிர்கொள்ளும் கடுமையான அந்நிய செலாவணி நெருக்கடியை கையாளும் முகமாக 50கோடி அமெரிக்க டொலர் கடன் தொடர்பான ஒப்பந்தம் தொடர்பாகத் தற்போது நிதி அமைச்சிற்குள் ஆய்வு செய்யப்பட்டு வருவதாக அறிய முடிகின்றது.

இலங்கை சார்பாக கடன் வழங்குநராக செயற்படும் நிதி அமைச்சிற்கும் சீன அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து 70 கோடி டொலர் கடனைப் பெற இலங்கை ஒப்புக்கொண்ட நிலையில் மார்ச் மாதத்தில் 50கோடி டொலர் பெற்றுக் கொள்ளப்பட்டது.

மீதமுள்ள 20கோடி டொலர் ஜூலை மாதத்தில் பெறப்படவுள்ள நிலையில் சீனத் தூதுவர் மற்றும் சீன அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என நிதி அமைச்சின் செயலாளர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் அந்நிய செலாவணி நெருக்கடியைத் தீர்க்க சீன வங்கியிடமிருந்து 150 கோடி டொலர் கடனைப் பெற இலங்கை மத்திய வங்கி ஒப்புக்கொண்டது.

இதேவேளை கடந்த மே மாதம் இலங்கைக்கு பங்களாதேஷில் இருந்து 20கோடி டொலர் கடனும் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு 'பைஸர்' தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுப்பு



மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்வியியல் கல்லூரி பயிலுநர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் தலைமையில் நேற்றுக்காலை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை ஆகியவை இணைந்து குறித்த தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டன.

மன்னார் மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகவும் அதே நேரம் மன்னார் மாவட்ட கல்வி வலயங்களில் கல்வி கற்கின்ற பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியியல் கல்லூரி மாணவர்கள், உயர் தொழில்நுட்பகல்லூரிமாணவர்களுக்கு விசேடமாக பைஸர் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு கோடிக்கும் அதிக தடுப்பூசிகள் இலங்கைக்கு இதுவரை கிடைத்தன

இலங்கைக்கு இதுவரை 1 கோடிக்கும் அதிகமான கொரோனாத் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 12 லட்சத்து 64 ஆயிரம் கோவிஷீல்ட் தடுப்பூசிகளும் 71 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகளும் கிடைத்துள்ளன.

இதேவேளை ஒரு லட்சத்து 80 ஆயிரம் டோஸ் ஸ்பூட்னிக் வி தடுப்பூசிகளும் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 700 டோஸ் பைஸர் மற்றும் 15 லட்சம் மடர்னா தடுப்பூசிகளும் இலங்கைக்கு கிடைத்துள்ளன என அவர் மேலும் கூறினார்.

இவற்றில், 33 லட்சத்து 64 ஆயிரத்து 100 டோஸ் தடுப்பூசிகள் நாட்டுக்கு நன்கொடையாகப் பெறப்பட்டன. என்றும் 68 லட்சத்து 8 ஆயிரத்து 700 டோஸ் தடுப்பூசியை அரசாங்கம் கொள்வனவு செய்தது என்றும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அதேநேரம் ஜப்பான் அரசாங்கத்தின் சார்பாக அடுத்த இரண்டு வாரங்களில் இலங்கைக்கு 56 லட்சம் டோஸ் சினோபோர்ம் மற்றும் 14 லட்சத்து 70 ஆயிரம் டோஸ் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் கிடைக்கும் என்று அவர் கூறினார்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 20

யாழ்ப்பாணத்தை 1996 இல் இலங்கை இராணுவம் கைப்பற்றிய காலத்தை ஒட்டி நடந்த சம்பவம் இது.

யாழ்ப்பாண நகரை அண்டி சுமார் இரண்டு, மூன்று கிலோ மீட்டர் நீள – அகலப் பிரதேசத்தை உச்ச பந்தோபஸ்தோடு உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவம் பேணியது. அதற்குள் நமது பத்திரிகை அலுவலகமும் இருந்தது.

அதற்கு வெளியில் குடாநாட்டின் பிற பகுதிகளும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில்தான் இருந்தன. ஆனாலும் அவற்றுக்குள் ஆங்காங்கே புலிகளின் சிறு,சிறு குழுக்கள் கரந்தடிப் படைகளாகச் செயல்பட்டு வந்தன. எனினும் புங்குடுதீவு புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தது. புலிகளின் யாழ் பிரிவு புங்குடுதீவைத் தளமாக வைத்துச் செயற்பட்டு வந்தது.

அந்தச் சமயத்தில்தான் இரண்டு சம்பவங்கள் நடைபெற்றன. இரண்டும் சுமார் இரண்டு மாத கால வித்தியாசத்தில் நடந்தன என நினைவு.

எங்கள் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவந்த செய்திகள், வடக்கில் இராணுவம் சிவில் நிர்வாகத்தை மீளக் கட்டியெழுப்ப வரிந்து கட்டிக் கொண்டு உதவுவதைப் போன்ற தோற்றத்தைப் புலிகளுக்குத் தந்திருந்தன. இதனால் அதிருப்தியுற்ற புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அது தொடர்பில் புலிகளின் பல பிரிவுகளைச் சேர்ந்த உள்ளூர்ப் பொறுப்பாளர்களை என்னுடன் பேச அனுப்பியிருந்தார். அந்தப் பிரதிநிதிகள் இடையாள் ஒருவர் மூலம் ஒரு துண்டு கடிதம் அனுப்பி, என்னை அழைத்து யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பகுதியில் உள்ள ஒரு பேக்கரியில் வைத்து என்னைச் சந்தித்தனர். பேக்கரி உரிமையாளரும் மனைவியும் எங்களுக்கு நேநீர் தந்து உபசரித்தனர். நாங்கள் பேசிக் கொண்டிருந்த சமயம் இராணுவம் அப்பகுதியில் திடீரென நுழைந்தமையால் நாங்கள் சந்திப்பை கைவிட்டு, தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று நாலா புறமும் சிதறி ஓட வேண்டியதாயிற்று. யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.



லண்டனில் பத்திரிகையாளர் மாநாட்டில் பங்குபற்றச் சென்ற எஸ்.டி.சிவநாயகம் ஐயா.

அடுத்த சம்பவம் சொற்ப காலம் கழித்து கொக்குவில், குளப்பிட்டிப் பகுதியில் நடந்தது. நான் புலிகளின் உள்ளூர் பொறுப்பாளர் குலதீபனைச் சந்தித்து செய்திப் பிரச்சினைகள் பற்றி உரையாடிவிட்டுப் புறப்பட்டு வந்த பின்னர் அப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டது. சுற்றிவளைப் பின் போது கிரனேட் வெடித்து குலதீபன் உயிரிழந்திருந்தார்.

இந்த இரண்டு சம்பவங்கள் பற்றியும் நான் 'என் எழுத்தாயுதம்' என்ற புத்தகத்தில் விவரமாக குறிப்பிட்டிருக்கிறேன். அதன் ஒரு பகுதி இப்படி தொடர்கின்றது:-

இப்படிச் சோகச் சம்பவங்களும் அருந்தப்புகளுமாக நாள்கள் கழிந்தன. இரண்டொரு மாதங்கள் கழித்து வழமைபோல ஒரு தடவை பலாலிப் படைத்தளத்துக்கு அழைக்கப்பட்டேன். எங்கள் பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி தொடர்பில் அரசுத்தரப்பு குழம்பியிருப்பதாகவும், அது சம்பந்தமான உரிய அறிவுறுத்தலை விடுப்பதற்காக வடக்குப் படைகளின் தளபதி என்னைச் சந்திக்க விரும்புகிறார் என்றும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட நேரத்தில் பலாலிப் படைத்தளத்தில் பிரசன்னமானேன் – வழமைபோல தனியாக.

அங்கு வடபகுதியின் படைகளின் தளபதி ஜெனரல் பலகல்ல என்னை வரவேற்றார். அவரது அலுவலக அறையில் இருந்த சோபா கதிரையில் அவருடன் அமர்ந்தேன். தேநீர் வந்தது. தேநீர் பரிமாறப்படும் சமயம் ஜெனரல் பலகல்ல ஏதோ கூறினார். எனக்கு அது விளங்கவில்லை .

*"தேநீர் குடித்தவர்கள் எல்லோரும் சந்தோஷமாக வெளியில் இருக்கின்றார்கள். தேநீர் கொடுத்தவர்களுக்குத்தான் நான் இரண்டாவது டீ. ஓவும் போட்டுவிட்டேன்.!'"* – என்றார் ஆங்கிலத்தில்.

*"எனக்குப் புரியவில்லை ஜெனரல்... அது என்ன டீ.ஓ....? யார், யாருக்குத் தேநீர் கொடுத்தார்கள்?"* – என்று வினவினேன்.



இராணுவத்தளபதி ஜெனரல் பலகல்ல

*"அதுதான் அந்த ஆனைக்கோட்டைச் சம்பவம். நீர் அருந்தப்பில் தப்பினீரே... அந்தச் சம்பவம்! அங்கு தேநீர் குடித்த புலிகளும் நீரும் தப்பிவிட்டீர்கள்.... தேநீர் பரிமாறிய பேக்கரி உரிமையாளருக்கும் மனைவிக்கும் இரண்டு* ***Detention Orders*** *(தடுப்புக் காவல் உத்தரவுகள்) வழங்கிவிட்டேன்"* – என்றார் ஜெனரல்.

தடுப்புக் காவல் உத்தரவுகள் மூன்று, மூன்று மாதங்களுக்கு ஒருதடவைதான் வழங்கப்படுகின்றன என்பதை நான் அறிந்திருந்தேன். மேற்படி ஆறுகால் மடம் சம்பவம் நடந்து முதலாவது மூன்று மாதம் தாண்டிவிட்டது. தொடர்ந்தும் அந்த பேக்கரி உரிமையாளரையும் அவரது மனைவியையும் தடுத்து வைப்பதற்காக இரண்டாவது உத்தரவும் வழங்கப் பட்டிருக்கின்றது என்பதைத்தான் ஜெனரல் அப்படிக் குறிப்பிடுகின்றார் என நான் புரிந்துகொண்டேன்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆறுகால்மடம் சம்பவத்துக்கும் எனக்கும் தொடர்பு இருப்பது குறித்து படைத்தரப்புக்கு எதுவும் தெரியாது, அதனால்தான் என்னை விட்டு வைத்திருக்கின்றார்கள் என்று நான் கருதியிருந்தேன். ஆனால் அது முழுத் தப்பு, எல்லாமே அவர்களுக்குத் தெரியும் என்பது அப்போதுதான் புரியலாயிற்று.

*"சம்பவம் நடந்த உடனேயே எனக்குத் தகவல் தரப்பட்டது. பத்திரிகை ஆசிரியர் ஒருவரைக் கைது செய்து விசாரிப்பதற்கு முன்னர் அது குறித்து வடபகுதித் தளபதி என்ற முறையில் என்னுடன் தொடர்பு கொண்டார்கள். நான்தான் அதைத் தடுத்தேன். அது உமக்கு நான் செய்த ஒரு சகாயமல்ல. யுத்தப் பிரதேசத்தில் நெருக்கடியான பத்திரிகைப் பணியை நீர் செய்கின்றீர் என்பதும் எமக்குத் தெரியும். அதற்காக நீங்கள் புலிகளுடன் தொடர்பாடல் வைத்திருப்பது தவிர்க்க முடியாதது என்பதும் எமக்கு விளங்கும். அதனால்தான் புலிகளைச் சந்திப்பதற்கு பத்திரிகையாளன் என்ற முறையில் உங்களுக்கு உரிமையுண்டு என்றும், ஆகவே அதற்காக மட்டும் அவரைக் கைது செய்வதாயின் அதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்றும் நான் புலனாய்வாளர்களைப் பணித்தேன். ஆனால் இரண்டு விடயங்களை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ஒன்று – புலிகளுடன் உங்களின் தொடர்பாடல் எந்தச் சமயத்திலும் பத்திரிகையாளன் மற்றும் புலிகள் தரப்பு என்ற ஊடாட்ட நிலையைத் தாண்டிப் போகக்கூடாது. அதாவது உங்கள் பேனாவுக்கு நீங்கள் நீதியாக – நேர்மையாக – ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் பணிபுரியும் வரை இந்தப் பாதுகாப்பை – உறுதியை – நீங்கள் எதிர்பார்க்க முடியும். ஆனால் அதையும் தாண்டி புலிகளின் உதவியாளர்களாக, பிரசாரகர்களாக நீங்கள் மாறும்போது இந்தப் பாதுகாப்பு உங்களுக்குக் கிட்டாமல் போகும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.*

*"அடுத்தது – மோதல், முரண்பாடு, பிணக்கு இடம் பெறும் சமயத்தில் அங்கு இருக்கும் படையினர் எல்லாம் பத்திரிகையாளனுக்கு உரிய இந்த விசேட சிறப்புரிமையை உங்களுக்குத் தந்து உங்களை மதித்து நடப்பார்கள் என்று எதிர்பார்க்காதீர்கள். அத்தகைய இடங்களில் சிக்காமல் தவிர்த்துக் கொள்ளுங்கள். தப்பித்தவறி நீங்கள் சிக்குண்டால், அதற்குப் பின்னரும் நீங்கள் உயிருடன் இருந்தால் மட்டுமே பின்பு நாங்கள் தலையிட்டுக் காப்பாற்ற வர முடியும் என்பதையும் விளங்கிக் கொள்ளுங்கள்."* – என்று சிறிய உபதேசமே செய்தார் ஜெனரல் பலகல்ல.

எனக்கு இனந்தெரியாத உணர்வு ஏற்பட்டது. எனக்குத் தெரியாமலேயே என்னைச் சுற்றி ஒரு கண்காணிப்பு வலயம் பல தரப்பினாலும் போர்த்தப்பட்டிருக்கின்றது என்பது எனக்குப் புரியத் தொடங்கியது.

அந்தச் சமயத்தில்தான் ஜெனரல் பலகல்ல இன்னொரு விடயத்தையும் அவிழ்த்து விட்டார். தமது உதவியாளரை அழைத்து ஒரு குறிப்பிட்ட fileஐ எடுத்து வருமாறு அவர் பணித்தார்.

அது வந்ததும் அதை மூடிவைத்துக் கொண்டே *"இது என்ன file தெரியுமா?"* – என்று கேட்டார் . அந்த file இல் சுமார் இரண்டு, மூன்று அங்குல உயரத்துக்குப் பல காகிதங்கள் கோவையிடப்பட்டிருக்கின்றமை தெரிந்தது. *"இது உம்மைப் பற்றிய file...!"* என்றார் அவர். நான் அசந்து போனேன்.

அந்த file ஐ திறந்து நடுப்பகுதியில் இருந்த ஒரு காகிதத்தைப் புரட்டினார். அந்தக் காகிதத்தை எழுதியவரின் ஒப்பமிடப்பட்ட பகுதியை மடித்துவிட்டு அந்த file ஐ என் பக்கம் திருப்பினார். *"இந்த அறிக்கையை வாசியும்"* – என்றார்.

அந்த ஆவணத்தைப் பார்த்து நான் வெலவெலத்துப் போனேன். அது குலதீபன் உயிரிழந்த சம்பவம் தொடர்பான புலனாய்வு அறிக்கை. சிங்களத்திலிருந்து ஆங்கிலத்துக்கு மொழி பெயர்த்திருந்தார்கள் போலத் தோன்றியது.

'சம்பவ தினத்தன்று குளப்பிட்டிப் பகுதியில் இடம் பெற்ற சுற்றிவளைப்பின் போது குலதீபன் கிரனேட்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டார்.

அந்தச் சம்பவத்துக்கு சுமார் 45 நிமிடங்களுக்கு முன்னர் சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் ஒன்றில் 'உதயன்' பிரதிநிதி ஒருவர் வந்து சுமார் 25 நிமிட நேரம் குலதீபனுடன் கதைத்துவிட்டுச் சென்றிருந்தார். சுற்றிவளைப்புச் சமயம் சம்பந்தப்பட்ட வீட்டுக்குள் இருந்து இருவர் பின்பக்கமாகத் தப்பி ஓடியுள்ளனர். அவர்களுள் ஒருவர் காயமுற்று பின்னர் சங்கானை வைத்தியசாலையில சிகிச்சை பெற்றுள்ளார்.' – என்றெல்லாம் அதில் ஆங்கிலத்தில் விலாவாரியாக எழுதப்பட்டிருந்தது.



தற்போது தளர்ந்து விட்ட ஜெனரல் பலகல்ல

வீட்டிலிருந்து தப்பியோடிய இருவர் பற்றிக் குறிப்பிட்ட அந்த அறிக்கையின் இறுதி வசனம் எனக்கு இன்னும் மனதில் பாடமாக இருக்கின்றது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | கணிதம் | அலகு 15

## சமன்பாடுகள்

**எளிய சமன்பாடுகளைத் தீர்த்தல்**

உதாரணங்கள் -

01. $X + 3 = 8$
 $X + 3 - 3 = 8 - 3$
 $X = 5$

02. $X - 4 = 7$
 $X - 4 + 4 = 7 + 4$
 $X = 11$

03. $2X = 8$
 $\frac{2X}{2} = \frac{8}{2}$
 $X = 4$

04. $2X + 3 = 7$
 $2X + 3 - 3 = 7 - 3$
 $2X = 4$
 $\frac{2X}{2} = \frac{4}{2}$
 $X = 2$

05. $\frac{X}{3} = 5$
 $\frac{X}{3} \times 3 = 5 \times 3$
 $X = 15$

05. $2X + 1 = X + 3$
 $2X + 1 - 1 = X + 3 - 1$
 $2X = X + 2$
 $2X - X = X + 2 - X$
 $X = 2$

**01. பின்வரும் சமன்பாடுகளைத் தீர்க்க.**

01. $X + 4 = 7$ ..............
02. $X - 5 = 6$ ..............
03. $3X = 15$ ..............
04. $3X - 2 = 7$ ..............
05. $5X - 7 = 8$ ..............
6. $5X + 1 = X + 13$ ..............
07. $2X + 3 = 13$ ..............
08. $3X - 2 = 13$ ..............
09. $4X - 1 = 19$ ..............
10. $3X - 2 = 7$ ..............
11. $3X - 2 = 13$ ..............
12. $4X - 5 = 7$ ..............
13. $5X = 15$ ..............
14. $\frac{(x)}{4} = 7$ ..............
15. $\frac{(2x)}{3} = 6$ ..............
16. $\frac{(2a)}{3} - 3 = 5$ ..............
17. $\frac{(x)}{3} + 4 = 5$ ..............
18. $\frac{5m}{2} + 3 = \frac{1}{5}$ ..............

**02. அடைப்புக்களைக் கொண்ட சமன்பாடுகளைத்தீர்த்தல்**

உதாரணங்கள் -

01. $2(X + 3) = 12$
 $2X + 6 = 12$
 $2X + 6 - 6 = 12 - 6$
 $2X = 6$
 $X = 3$

02. $5(X - 1) = 10$
 $5x - 5 = 10$
 $5X - 5 + 5 = 10 + 5$
 $5X = 15$
 $X = 3$

03. $\frac{2(X + 3)}{5} = 4$
 $\frac{2(X + 3) \times 5}{5} = 4 \times 5$
 $2(X + 3) = 20$
 $2X + 6 = 20$
 $2X = 14$
 $X = 7$

**பின்வரும் சமன்பாடுகளைத்தீர்க்க.**

01. $3(X + 4) = 15$ ......................
02. $4(X - 3) = 16$ ......................
03. $2(X + 3) + 3 = 17$ ......................
04. $2(X + 2) - 1 = 7$ ......................
05. $5(X - 1) - 4 = 11$ ......................
06. $10(1 - 2x) + 1 = 6$ ......................
07. $3(p - 2) = 9$ ......................
08. $2(3 - 4x) - 1 = -19$ ......................
09. $5(1 - 3x) = 20$ ......................
10. $2 - \frac{3x}{4} = -7$ ......................
11. $2\frac{(x-1)}{3} = -6$ ......................
12. $2\frac{(5x+1)}{2} = -18$ ......................
13. $\frac{1}{5}(x - 2) = 2$ ......................
14. $\frac{1}{2}(3 - x) - 1 = 4$ ......................
15. $\frac{1}{3}(2p - 1) + 2 = \frac{5}{9}$ ......................

**03. இரண்டு அடைப்புகளுடனான சமன்பாடுகளைத் தீர்த்தல்**

அடைப்புக்குறிகள் இடும் ஒழுங்கு முறை
( ) - எளிய அடைப்பு
{ } சங்கிலி அடைப்பு
[ ] - இரட்டை அடைப்பு

உதாரணம் -

$5\{2(3x-1)+x\} = 95$
$\frac{(5\{2(3x-1)+x\})}{5} = \frac{95}{5}$
$2(3x-1)+x = 19$
$6x-2+x = 19$
$7x-2 = 19$
$7x-2+2 = 19+2$
$7x = 21$
$x = 3$

பயிற்சி

01. $3(2x + 1) + 5 = 20$ ......................
02. $2\{8 + 2(a - 2)\} = 28$ ......................
03. $5\{3(x + 4) - 2x\}$ ......................
04. $3\{7x - 2(x - 2)\} = 72$ ......................
05. $5y + 2\{4 + 2(y - 2)\} = 22$ ......................
06. $2\{3(x+2) - 2(x-3)\} = 34$ ......................
07. $3\{2(x-1) + 2\} = 18$ ......................
08. $5\{3(x + 2) - 2(x - 1)\} = 60$ ......................
09. $6 + 2\{x + 3(x + 2)\} = 58$ ......................
10. $5\{2 + 3(x + 2)\} = 10$ ......................

**04. பின்னங்களைக் கொண்ட எளிய சமன்பாடுகளை தீர்த்தல்**

உதாரணம் -

01. $\frac{2x}{4} + \frac{x}{2} = 5$
 $\frac{2x+2x}{4} = 5$
 $4X = 20$
 $X = 5$

02. $\frac{a+1}{2} - \frac{a-2}{3} = 2$
 $\frac{3(a+1) - 2(a-2)}{6} = 2$
 $\frac{3a+3-2a+4}{6} = 2$
 $\frac{a+7}{6} = 2 \rightarrow a+7 = 12 \rightarrow a = 12-7 = 5$

**பயிற்சி**

01. $\frac{x-2}{5} = 4$ ......................
02. $\frac{2a}{3} + 1 = 7$ ......................
03. $\frac{p+3}{2} = 5$ ......................
04. $\frac{3x}{2} + \frac{x}{4} = 7$ ......................
05. $4\left(\frac{3x}{2} - 1\right) = 12$ ......................
06. $\frac{m-3}{2} + 1 = 4$ ......................
07. $\frac{y+1}{2} + \frac{y-3}{4} = \frac{1}{4}$ ......................
08. $\frac{y+8}{3} = 5$ ......................
09. $\frac{5b}{2} - 3 = 2$ ......................
10. $\frac{3m-2}{7} = 4$ ......................
11. $\frac{2m}{3} - \frac{3m}{5} = 1$ ......................
12. $\frac{1}{3}\left(\frac{2a}{3} - 3\right) = 2$ ......................
13. $\frac{x+1}{2} + \frac{x}{3} = 8$ ......................
14. $\frac{x+3}{2} - \frac{x+1}{3} = 2$ ......................

**05. ஒருங்கமை சமன்பாடுகளை தீர்த்தல்**

உதாரணம் : 1

01. $3x + y = 20 \rightarrow$ ①
 $x + y = 12 \rightarrow$ ②
 ① - ② $\rightarrow 3X + y - x - y = 20 - 12$
 $2x = 8$
 $x = 4$
 $x = 4$ ஐ 2இல் பிரதியிடல்
 $4 + y = 12$
 $y = 8$

உதாரணம் : 2

02. $5a + 2b = 37 \rightarrow$ ①
 $3a - 2b = 19 \rightarrow$ ②
 ① + ② $\rightarrow 5a + 2b + 3a - 2b = 37 + 19$
 $8a = 56$
 $a = 7$
 $a = 7$ ஐ 1இல் பிரதியிடல்
 $5 \times 7 + 2b = 37$
 $2b = 37 - 35$
 $2b = 2$
 $b = 1$

**பயிற்சி**

01. $a + b = 5$; $a - b = 1$
02. $m + 2n = 7$; $m - n = 1$
03. $2a + 3b = 16$; $4a + 3b = 26$
04. $x + 3y = 12$; $-x + y = 8$
05. $7x + y = 11$; $x - y = 5$
06. $-2x + 3y = 15$; $2x + y = 13$
8. $x + y = 8$; $2x + y = 2$
9. $4c - b = 7$; $4c - 2b = 2$
10. $3k + 4l = 4$; $3k - 2l = 16$
11. $3m - 2n = 10$; $-3m + n = -14$
12. $4a - 3b = 17$; $a - 3b = 2$
12. $a - 2b = 13$; $5a + 2b = 17$

**ஆக்கம் - தாமினா சுபாகரன்**
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்தரி)
யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

## 300 டெல்டா மாறுபாட்டு தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கலாமென எச்சரிக்கை!

சமூகத்தில் 300 டெல்டா தொற்றாளர்கள் இருக்கக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது மிகவும் எச்சரிக்கை மிக்கதும் அபாயம் மிக்கதுமான நிலைமை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த தொற்றாளர்கள் நாட்டில் ஒரு பிரதேசத்தில் மாத்திரமன்றி பல இடங்களிலும் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை உள்ளிட்ட மாவட்டங்களில் இந்த தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழர் ஒற்றுமைக்காக உழைத்த உடுப்பிட்டிச் சிங்கம் சிவசிதம்பரம்

ஆ.ந.இராசேந்திரன்

(நேற்றைய தொடர்ச்சி)

1970 தேர்தலில் எந்தெந்தக் கட்சிகள் எங்கெங்கு வெற்றிபெற்றனவோ அந்தந்த தொகுதிகளை அந்தந்த கட்சிகளுக்கு விட்டுக் கொடுப்பது என்று தீர்மானம் எடுக்கப்பட்டது. இதனடிப்படையில் வட்டுக் கோட்டை, நல்லூர், கிளிநொச்சி ஆகிய தொகுதிகளில் தமிழ்க் காங்கிரஸுக்கும் மற்றையவை தமிழரசுக் கட்சிக்கும் வழங்கப்பட்டன. இதனடிப்டையில் கிளி நொச்சி ஆனந்தசங்கரிக்கும், நல்லூர் சிவா ஐயாவுக்கும், வட்டுக்கோட்டை குமார் பொன்னம்பலத்துக்கும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் குமார் பொன்னம்பலம் வட்டுக்கோட்டையில் தோற்றுவிடுவோமோ என்ற பயத்திலோ என்னவோ அங்கு போட்டியிட மறுத்து யாழ்ப்பாணத்தில் போட்டியிட வேண்டும் என்று அடம்பிடித்தார். ஆனால் தலை வர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் வட்டுக்கோட்டை திருநாவுக் கரசு அவர்களுக்கு வழங்கப்பட்டது. துரதிஷ்டவசமாக குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் மரச் சின்னத் தில் சுயேச்சையாகக் போட்டியிட்டுத் தோற்றுப் போனார். தலைவர் சிவசிதம் பரம் நல்லூர் தொகுதியில் பெருவாரி யான வாக்கு வித்தியாசத்தில் நாடாளு மன்ற உறுப்பினரானார்.

தலைவர் நல்லூரில் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்திருந்த ஓய்வுபெற்ற நீதிபதி தம்பித்துரை அவர் களின் இல்லத்தில் வசித்து அலுவலகம் அமைத்து நல்லூர் மக்களுக்குப் பணி யாற்றினார். 1981இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசம்பாவிதத்தின் போது யாழ்ப் பாணம் பிரதான வீதியில் அமைந்தி ருந்த தமிழரசுக் கட்சியின் காரியாலயம் எரிக்கப்பட்டமையால் அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் காரியால யமாக தலைவர் சிவசிதம்பரத்தின் அலு வலகம் செயற்பட்டது.

1981 ஆம் ஆண்டு அபிவிருத்திச் சபைத் தேர்தலில் நான் போட்டியிட்டமை யால் தலைவர் சிவசிதம்பரம் அவர்களுட னான நெருக்கம் அதிகரித்தது. மாவட்ட சபையில் எனக்கான இடம் ஏற்கனவே ஏற்றுக் கொண்டபடி ஆறாம் இடத்தில் இருந்து மூன்றாம் இடத்திற்கு உயர்வடை வதற்கு தலைவர் அமிர்தலிங்கமும் சிவ சிதம்பரமும் காரணகர்த்தாக்களாக இருந் தனர். இந்தச் சம்பவமானது அப்போதைய தலைவர்கள் நலிந்த பிரிவினர் பால் எவ் வாறான அக்கறை கொண்டிருந்தார்கள் என்பதை வெளிக்காட்டுகின்றது.

இந்தப் பெருந் தலைவர்கள் எம்மை எப்படி அரசியலில் வளர்த்தெடுத்தார்கள் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சொல்வது அவசியம் என நினைக்கின்றேன்.

இப்போது கட்சிக் கட்டுப்பாடுகளுக்கு மாறாக, கட்சிக்கு இழுக்கு ஏற்படும் விதத் தில், பகிரங்கமாக பத்திரிகைகளில் செய்தி வரவேண்டும் என்பதற்காக அடிபட்டுக் கொள்ளும் கட்சி உறுப்பினர்கள் மாதிரி யன்றி, தலைவர்களுக்கு மதிப்புக் கொடுக் கும் அங்கத்தவர்களாக நாங்கள் ஒழு



## நேற்று அவரது 98ஆவது பிறந்ததினம்

கினோம் என்பதைக் கூறாமல் விடுவது குற்றமாகும்.

மாவட்ட சபையானது தமிழரின் அரசி யல் அதிகாரப் பங்கீட்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சியாக இருந்தது. இந்த சபைகளில் தெரிவு செய் யப்பட்ட அங்கத்தவர்களுடன் அந்தந்த மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் உத்தியோகப்பற்றின் மூலம் அங்கத்தவர் களாக இருந்தவர்கள். யாழ் மாவட்டம் இப்போதைய கிளிநொச்சி மாவட்டத்தை யும் உள்ளடக்கியிருந்தது. மொத்தம் 10 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் 11நாடாளுமன்றஉறுப்பினர்களும்அங்கத்த வர்களாக இருந்தனர். மொத்தம் 21 அங் கத்தவர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர் களாக இருந்தமை எக்காலத்திலும் வேறு எங்கேயும் நடைபெறாத அதிசயமாக இருந்தது. சபை நடவடிக்கைகள் குழப் பம், சேறுபூசல், கழுத்தறுப்பு எதுவும் இன்றி சுமுகமாக நடைபெற்றன.

தலைவர் சிவசிதம்பரம் அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது தலை மைத்துவப் பண்புகளை வெளிக்காட்டி நின்று மறைந்த தலைவராவார். பிரபல மான வழங்கறிஞராக, சிறந்த அரசியற் தலைவராக இருந்த போதும் எல்லோரை யும் வயது வித்தியாசம் பார்க்காது தகுதி தாற்பரியம் பார்க்காது அன்பாக சேர் (ஐயா) என்று அன்புடன் அழைக்கும் அவரின் பண்பு எவரிடத்திலும் காணமுடி யாததொன்றாகும்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத் தின் போது கொழும்பில் இருந்த தலைவர் சிவசிதம்பரம் அவர்களின் வீடு தீக்கிரை யாக்கப்பட்டது. அவரது வாகனம் எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. அவரது குடும்பத்தி னர் மதிலால் ஏறி அதிர்ஷ்டவசமாகத் தப் பித்துக் கொண்டனர். இந்தச் சம்பவம் நடைபெற்ற போது தலைவர் மன்னாரில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி யின் மாநில மகாநாட்டில் பங்குபற்றுவதற் காக மன்னாரில் தங்கியிருந்தமையால் தப்பினார்.

பின்பு சில நாள்களின் பின் அரசியற் தீர்வு பற்றி இலங்கை ஜனாதிபதியுடன் பேசுவதற்காக இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் விசேட தூதுவராக இலங்கை வந்திருந்த பார்த்தசாரதியைப் பார்ப்பதற் காக கொழும்பு சென்றிருந்த வேளையில் தலைவர் தனது வீட்டைப் பார்வையிட வேண்டும் எனச் சென்றார். அவருடன் நானும் உடன் சென்றிருந்தேன். தலை வரின் வீட்டைப் பார்த்த போது ஓர் அதி சயம் கண்டோம். தலைவரின் வீடு பூரண மாக எரிந்து சாம்பலாகி இருந்தது. ஆனால் நடுவில் ஒரு சுவரில் மாட்டப்பட்டிருந்த தலைவரின் படம் மட்டும் எதுவித பாதிப் பும் இன்றி தொங்கிக்கொண்டிருந்தது. அதனை அகற்றி பத்திரமாக யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்த்தோம். இதனை நான் ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் தலைவர் அவர்கள் இறைபக்தி மிக்கவர். எவருக்கும் தீங்கு செய்யாதவர். அதனால் அவருடைய படம் தப்பியிருந்தது என்று எம்முடன் இருந்தவர்கள் கூறியது இப்



போதும் எனது காதில் ஒலிக்கின்றது.

தலைவர் சிவசிதம்பரம் அவர்கள் 1983இன் இறுதிப் பகுதியில் தலைவர் அமிர்தலிங்கத்தின் அழைப்பை ஏற்று இந்தியாவுக்குச் சென்றார். அங்கு தமிழர் பிரச்சினை சம்பந்தமாக இந்திய அரசுட னும் மற்றைய வெளிநாட்டவர்களுடனும் தமிழர் தரப்பு பிரதிநிதியாக கலந்து கொண்டு, தலைவர் அமிர்தலிங்கத்துட னும் சம்பந்தனுடனும் இணைந்து பணியாற்றினார். சென்னை, டில்லி, கொழும்பு என்று ஓடி யாடி உழைத்தார். தலைவர் சிவசிதம்பரம், கட்சித் தலைவர் அமிர்தலிங்கம்பால் மிகுந்த மரியாதையும் நம்பிக்கையும் கொண்டிருந்தார். எல்லா விட யங்களிலும் உறுதுணையாக, உதவியாகச் செயற்பட்டார். தன்னை முதன்மைப்படுத்த வேண்டும் என்று எப்போதும் எண்ணியவரல்லர். தான் முதன்மையாக நிற்க வேண் டிய சமயங்களில் கூட மற்றவர் களுக்கு மதிப்பளித்து மரியா தையாக நடந்துகொண்டார்.

தமிழர் விடுதலைக்கூட் டணி 1989ஆம் ஆண்டு நடை பெற்ற நாடாளுமன்றத் தேர் தலில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமி ழீழ விடுதலை இயக்கம், ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி ஆகிய இயக்கங்களுடன் இணைந்து போட்டியிட்டது. இதில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஏழு இடங்களும், ஈழமக் கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு மூன்று இடங்களும் தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு இரண்டு இடங்களும் ஈழ தேசிய ஜனநாயக முன்னணிக்கு இரண்டு இடங்களும் ஒதுக்கப்பட்டன. தலைவர் சிவசிதம்பரம் தலைமை வேட்பாளராக போட்டியிட்டார். அதில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் யோகேஸ்வரன், நீலன் திருச்செல்வம், ஆ.ந.இராசேந்திரன், ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, இரத்தினசிங்கம் ஆகியோர் போட்டியிட் டனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து தேர்தல் வேலைகளைச் செய்யமுடியாத காரணத்தினால் எவருக்கும் தேவையான விருப்புரிமை வாக்குகளைப் பெறமுடிய வில்லை. ஈ.பி. ஆர்.எல்.எவ். மாகாண சபையின் ஆட்சியில் இருந்தமையால் தமது ஆதரவாளர்களின் மூன்று விருப்பு வாக்குகளையும் தமது வேட்பாளருக்கு மட்டும் இடச் செய்து கிடைத்த மூன்று இடங்களையும் கபளீகரம் செய்தது.

சிவசிதம்பரம் தேர்தலின் பின் அப்போது கட்சி அலுவலகமாக இருந்த பௌத்த லோக மாவத்தை வீட்டில் தங்கியிருந்து அரசியற் கடமைகளை ஆற்றினார். 1989 ஆம் ஆண்டு தமிழ் சிங்கள புதுவருடத் தின் போது அந்த அலுவலகத்தில் கடமை புரிந்த சகலரையும் அழைத்துச் சென்று பம்பலப்பிட்டியில் உள்ள பிரபலமான உடுப் புக் கடையில் அவரவர் விருப்பப்படி உடுப்பு வாங்கிக் கொடுத்தார். இது அவர் தம்மு டன் பணியாற்றுபவர்களை எவ்வளவு தூரத்திற்கு மதிப்பவர், அன்பு செலுத்து பவர் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

எழுபதுகளின் இறுதியிலும் எண்பது களில் ஆரம்பத்திலும் கொழும்பில் நடை பெறும் கூட்டங்களில் யாருக்கும் பயப் படாது கருத்துக்களை முன்வைக்கும் தலைவராக அவர் இருந்தார். இரகசியப் பொலிஸாரின் கெடுபிடிகள் உச்சமாக இருந்தகாலத்திலும் கருத்துக்களை மென்று விழுங்காது வெளிப்படையாக கணீரென உரைத்த தலைவராக இருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 2001ஆம் ஆண்டு தேர்தலில் கிடைத்த தேசி யப் பட்டியல் இடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். உடல் மிகவும் தளர்ந்திருந்த வேளையிலும் தமிழ் மக்களுக்கு சேவை செய்ய வேண் டும் என்ற பெருநோக்கில் சக்கர நாற்காலி யில் நாடாளுமன்றத்திற்குச் சென்றார். அவர் 2002 ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி கொழும்பில் இயற்கையெய்தினார்.

1989 ஆம் ஆண்டு அவரைச் சுட்டுக் கொல்ல முயற்சித்த அதே அமைப்பே





2002இல் அன்னாருக்கு உயர் கௌரவம் கொடுத்து அவரது இறுதிச் சடங்கை கிளி நொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் நடத்த அனுமதியளித்தது மட்டுமன்றி தாமும் பங்குபற்றினர் என்பது அவர் தம் அரசியற் பணியையும், தமிழினப் பற்றையும் அங்கீகரிப்பதாக அமைந்தது. இன்றைய நாளில் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தி அன்னாருக்கு மரியாதை செய்ய வேண் டியது எல்லாத் தமிழர்களினது கடமை யாகும். *





- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 72

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**223. தமிழ்ச் செல்வன் ஒஸ்லோவில் விடுதலைப் புலிகளுக்காக வெளியிட்ட அந்த தீர்மானத்தில் சொன்ன செய்தி என்ன?**

இதனை இடைக்கால சபையை (ISGA) வடிவமைத்த விடுதலைப் புலிகளின் புத்திஜீவிகளே தயாரித்திருந்தார்கள். அதில் போராட்டம் தொடங்கிய நாள் தொட்டு நடந்தவைகளை கூறி பேச்சுவார்த்தைக் காலங்களில் ஶ்ரீலங்கா அரசுகளின் நம்பகத் தன்மைகளையும் சுட்டிக்காட்டி 63 காரணங்கள் சொல்லப்பட்டிருந்தன. ஆனால் சர்வதேசம் புரிந்து கொண்ட சிலவற்றைத் தருகிறேன்.

தமிழ் ஈழத்தின் எல்லைப் பரப்பில் 70 வீதத்திற்கும் மேலான பகுதிகளையும், அது உள்ளடக்கிய கடல் பரப்பையும், அதற்கேயுரிய சட்டங்கள், சுதந்திரமாக இயங்கும் நீதித்துறை, பொலிஸ் காவல்படை, மற்றும் முழு நிர்வாகத்தையும் ஏற்று நடத்தும் கட்டமைப்புக்குள் வைத்திருக்கும் தமிழ் ஈழ தேசத்தின் இடைக்கால அரசின் முறையான பிரதிநிதிகளும், இப்பொழுது நோர்வே அரசின் அனுசரணையில் நடக்கும் தீர்வு பேச்சுவார்த்தைகளில் அவர்களின் தனித்த பேச்சாளரும் என தமிழீழ விடுதலைப் புலிகள் அவர்களின் நவீன இராணுவம் ஊடாக அவர்களின் காவலர்களும் பாதுகாப்பாளராக இருப்பதனால் என பலவற்றை சொல்லி......

**(The de facto State of Tamil Eelam exercising jurisdiction over 70 percent of the Tamil Homeland, with control over the seas appurtenant there, with its own laws, independent judiciary, police force and full administrative apparatus; the Liberation Tigers of Tamil Eelam (LTTE), being the authentic representative of the Tamil Nation and its sole interlocutor in the current peace process facilitated by the Royal Norwegian Government; the LTTE acting as the sole defender and protector of the Tamil Nation, its People and the State**



மதியுரைஞர்
அன்ரன் பாலசிங்கம்

**institutions with its modern defence forces.)**

இப்படி **noting..., noting...** வரிசையாகப் பல விடயங்கள் சொல்லப்படுகின்றன.

சர்வதேசம் ஒன்றுபட்ட **(United )** நாட்டுக்குள்தான் தீர்வை காண வேண்டும் என நிர்பந்தித்தாலும் அத்தோடு விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைப் பயமுறுத்தல்கள் பேச்சுவார்த்தைகளின் சமநிலையையும் பாதித்து சிறிலங்கா அரசுக்கு ஒரு தீர்வை தேட வேண்டும் என்ற மனோபாவத்தை தராது.

**(Noting that the international community's insistence that the solution should be found within a united Sri Lanka coupled with the military threat against the LTTE will not only disrupt the power equilibrium but also remove the incentive for the GoSL to seek a negotiated settlement.)**

சர்வதேசத்தின் குறுகிய, தவறுதலான கண்ணோட்டத்தில் தமிழ்த் தேசத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து பிரித்து பார்க்க முனைந்ததும் அதனை அதனது தனித்த பேச்சாளன் எனப் புரிந்து கொள்ளாதது தீர்வு பாதைகளில் குந்தகம் விளைவிக்கும் எனவும் கூறப்பட்டது.

**(Noting that the International Community's recent misguided attempt to differentiate the Tamil Nation from the LTTE, the sole interlocutor of the former in the negotiations, is injurious to the peace process)**

சிறிலங்கா அரசாங்கம் தோல்வி கண்ட நாடுகளின் பட்டியலில் 25 ஆம் இடத்தை பிடித்திருப்பதால் அது பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் ஏற்படக்கூடிய தீர்வை நோக்கிப் போகக் கூடிய விருப்பம் வெளிப்படுத்த முடியாமையாலும் என்றும் தெரிவிக்கப்பட்டது.



பத்திரிகையாசிரியர் வித்தியாதரனோடு
மஹிந்த ராஜபக்ஷ

**(Noting that Sri Lanka has achieved the status of being 25th in the index of failed states, and is demonstrating its lack of will and ability to enter into a just and equitable negotiated settlement;**

**Reaffirms its policy of finding a solution to the Tamil national question based on the realisation of its right to self‡determination.)**

**224. அப்படியான எண்ணங்களுக்கு தூண்டியவை எவை?**

முதலாவது – பாலசிங்கம் ஒஸ்லோவில் ஏற்றுக் கொண்டதற்கு மேல் இடைக்கால சபை **(ISGA)** சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த செய்தியில் சொல்லப்பட்ட சுயநிர்ணய உரிமை என்பது எதைக் குறிக்கின்றது.? உள்ளக சுயநிர்ணய உரிமையா (பாலசிங்கம் ஏற்றுக் கொண்டது போல) அல்லது அதற்கும் மேலானதாக போர் சம்பந்தப்பட்டு பெறும் வெளிப்புற சுயநிர்ணயமா?

அவர்களது நிலைப்பாடு தாம் ஓர் இடைக்கால தமிழீழ அரசு என்பதால் ஒன்றுபட்ட நாட்டுக்குள்ளான தீர்வுக்கு ஒத்து வரும் எண்ணம் தென்படவில்லை என்பது.

அதற்கு மேலாக தமிழ்ச்செல்வன் தங்களால் தங்களது பலத்தையும் அதிகார வரம்பையும் எந்தவித சந்தேகங்களுக்கும் இடமளிக்காது சிறிலங்கா அரசுக்கு தெரியப்படுத்தலாம் என்றும், சர்வதேசத்திலிருந்து ஒரு தலைப்பட்சமாக வரும் அழுத்தங்களுக்கெல்லாம் விடுதலைப் புலிகள் பயந்து விடப் போவதில்லை எனவும், ஐரோப்பிய ஒன்றியத்தினால் தாங்கள் தடை செய்யப்பட்டு விட்டதால் விடுதலைப் புலிகள் ஒடுங்கி வருவார்கள் என எண்ணப்பட்டால் அது தவறு என்றும், சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் கணக்கெடுத்து, பாரிய மாற்றங்களை தங்களது அரசியல் யாப்பில் கொண்டு வருதல் வேண்டும் என்றும் சூளுரைத்தார்.

அதே பாணியில் பிற தளபதிகளும் தமிழ் ஈழம் என்பது பகற் கனவு எனப் பிரச்சாரம் செய்து திரியும் சிறிலங்காவின் சமாதான காரியாலயம், எது பகற் கனவு என்பதை விரைவில் உணர்வார்கள் என்ற கூற்றுடன் பேச்சுக்களே நிறைவடைந்தன.

இந்த மேன்மை கொண்ட ஆர்ப்பரிப்புக்களிடையே 20 ஜூன் 2006 இல் ஜனாதிபதி மஹிந்த ஒரு செயல்பாட்டை முன்னெடுத்தார். அவர் அப்பொழுது உதயனில் ஆசிரியராக இருந்த வித்தியாதரனை அணுகி, விடுதலைப் புலிகளுடன் ஒரு நேரடிப் பேச்சுக்கு ஒழுங்கு செய்து தருமாறு கோரினார். அப்படி அவர்கள் ஏற்றுக் கொண்டால், ஒரு புரிந்துணர்வில் நோர்வேயை விட்டு விட்டுத் தாங்கள் இரு தரப்புகளும் நேரடியாகப் பேசலாம் என்பதே அவர் திட்டம். அந்தப் பேச்சுவார்த்தைகளை ஏற்று இரண்டு கிழமைகளுக்குத் தன்னோடு ஒரு போர் நிறுத்த ஏற்பாட்டுக்கு வந்தால் மஹிந்த கருணாவை முடக்குவதாகவும் ஏற்றுக் கொண்டார்.

அந்தப் பேச்சுக்கான கோரிக்கையை முன்வைக்கும்போது வித்தியாதரனுக்குத் தான் பலமான நிலையில் இருப்பதாகவும், புலிகளிடமிருந்து வரக் கூடிய தாக்குதல்களை எதிர்கொள்ள முடியுமென்றாலும், தேவையில்லாத, அர்த்தமற்ற அழிவுகளை தவிர்க்கும் எண்ணத்தில் இதை முன்னெடுப்பதாகக் கூறித் தான் இராணுவத்துக்கும், புலிகளுக்கும் இடையில் ஒரு 'சான்ட்விச்' ஆக அகப்பட்டிருக்கிறேன் எனப் பிரஸ்தாபித்தார்.

**225. அந்தச் செய்தியை உதயன் ஆசிரியர் விடுதலைப் புலிகளுக்கு கொண்டு சென்றாரா?**

அவர்களுக்கு அது தெரியப்படுத்தப்பட்டது. நோர்வேயைத் துறந்து நேரடியாகப் பேசும் தைரியம் அரசுக்கு இருந்தால் அதை, ஒளிவுமறைவின்றிப் பகிரங்கமாக அறிவித்துச் செய்ய முன்வருமாறு பதிலிறுக்கப்பட்டது. அப்படி அறிவித்துச் செய்யத் தயார் என்றால் தாங்களும் அதற்குத் தயார் எனப் பதில் அறிவிக்கப்பட்டது.

பாலசிங்கம் சிலேடையாக ஏன் மஹிந்தா தான் இராணுவத்துக்கும் புலிகளுக்குமிடையில் சான்ட் விச் ஆகச் சிக்குகிறேன் என ஏன் கண்ணீர் விடுகின்றார்? அவர்தானே இராணுவத்தின் தலைமை தளபதி, அவர் நினைத்தால் இராணுவத்தை எல்லா வகையிலும் கட்டுப்படுத்தலாம் என சொல்லிவிட வித்தியாதரனிடம் சொன்னார். பாலசிங்கம் கூறியவைகளையும் ஜனாதிபதிக்குத் தெரிவித்து, வித்தியாதரன் இவர்களிடையே



பாலாவைப் பேட்டி கண்ட
நூப்பூர் திவாரி

செய்திப் பரிமாற்றத்தில் ஈடுபட்டு, இரண்டு பகுதியினரும் சில ஏற்பாடுகளைச் செய்து கொள்ள உதவியாய் இருந்தார். இடையில் பாலசிங்கம் சரித்திர முக்கியத்துவம் நிறைந்த பேட்டி ஒன்றை இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கினார்.

**226. அந்த ஊடகச் செய்தி என்ன?**

இந்த ஊடகச் செய்தி 27 ஜுன் 2006 இல் இந்தியாவின் NDTV தொலைக்காட்சிக்கு பாலசிங்கம் கொடுத்தார். அவரைப் பேட்டி எடுத்தவர் நூப்பூர் திவாரி. அதில் இந்தியாவின் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டது சரித்திரத்தில் அழிக்கப்படமுடியாத வரலாற்றுத் துன்பியல் நிகழ்வு என்றும் இந்திய மக்களை அந்த நிகழ்வை பெருந்தன்மையாக மறந்து, இனப்பிரச்சினைகளில் மேலும் ஈடுபட்டு, ஒரு நிரந்தர தீர்வுக்கு உதவி செய்ய வேண்டும் எனக் கேட்டார். தாங்கள் எப்பொழுதும் இந்தியாவின் புவிசார் அரசியலுக்கு மாறாக சென்று எந்தக் குந்தகமும் செய்ய மாட்டோம் என்றும், இந்தியா ஒரு பாரமான பொறுப்பை எடுக்க வேண்டும் என்று கோரினார்.

(வளரும்...)

# அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஓட்டோக்களை தனிப்பட்ட விடயங்களுக்கு பயன்படுத்த வேண்டாம்

## சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் உதய ஹேமந்த அறிவுறுத்து



அரசாங்கத்தால் காவல்துறையினருக்கு வழங்கப்பட்ட ஓட்டோக்களை தனிப்பட்ட விடயங்களுக்காகப் பயன்படுத்த வேண்டாம் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உதய ஹேமந்த கேட்டுக்கொண்டார்.

இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஓட்டோக்களை திருகோணமலை காவல் துறை பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர் -

ஓட்டோக்கள் அனைத்தும் கிராமப் பகுதி காவல்துறை நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசால் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

பாரிய வாகனங்கள் மற்றும் காவல்துறை வாகனங்கள் பயணம் செய்ய இயலாத பகுதிகளில் இந்த வாகனங்களைப் பயன்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் உதய ஹேமந்த, திருகோணமலை பிராந்திய காவல் துறை அத்தியட்சகர் பிரஸன்ன பிராத்மனகே ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



# கொரோனாவுக்கு எதிராக பொத்துவிலில் விழிப்புணர்வு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

பொத்துவில் பிரதேசத்தில் மிக வேகமாகப் பரவி வரும் கொரோனாத் தொற்று நோய்த் தாக்கத்திலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் பொருட்டு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் பொத்துவில் பிரதேச சபையுடன் இணைந்து பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் பிரதேசத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் 29 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் தற்போது 276 தொற்றாளர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை 2 நபர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக் கட்டமாக பொத்துவில் பொதுச் சந்தையில், பொதுச் சுகாதார காரியாலயம் தொடக்கம் தபால் அலுவலகம் வரை வீதி விழிப்புணர்வு நடைபவனி இடம் பெற்று துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ. யூ. அப்துல் சமட், பிரதேச சபை தவிசாளர் எம்.எச். அப்துல் ரஹீம் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மலிக், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், ஊழியர்கள், ஸ்ரீலங்கா யுனிட்ரிஸ் அமைப்பின் தொண்டர்கள் மற்றும் பொதுச் சுகாதார அலுவலக தண்ணார்வத் தொண்டர்கள் என பலர் இதில் கலந்து கொண்டனர்.

# பஹ்ரைன் முதலீட்டாளர்களுக்கு இலங்கை அழைப்பு விடுத்தது

மத்திய கிழக்கு நாடுகளுடன் பொருளாதார உறவை மேம்படுத்துவதற்கான பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சின் ஆணைக்கு இணங்க, பஹ்ரைன் இராச்சியத்தின் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சயீத் பின் ரஷீத் அல் சயானியுடன் பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தொலைபேசி வாயிலாக கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் இலங்கையின் பொருளாதார உறவை மேம்படுத்துவதற்காக இந்தக் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை இரு அமைச்சர்களும் ஆராய்ந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது, தெற்காசியாவின் நுழைவாயிலாக விளங்கும் கொழும்புத் துறைமுக நகரத்தில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்களை எடுத்துரைத்த இராஜாங்க அமைச்சர் பாலசூரிய, இந்த விசேட பொருளாதார வலயத்தின் ஏராளமான வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பஹ்ரைன் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

பிராந்திய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு விருப்பமான இடமாக மாறியுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பஹ்ரைன் அரசாங்கம் செயற்படுத்திய நடைமுறைகள் தொடர்பாக அமைச்சர் அல் சயானி விரிவாக விளக்கினார்.

சுற்றுலாத்துறைகளிலான ஒத்துழைப்பு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கும் ஆக்கபூர்வமான பொருளாதாரம் மற்றும் பல்தரப்பு அரங்கு உட்பட பரஸ்பரம் ஆர்வமுள்ள பல துறைகள் தொடர்பாகவும் அமைச்சர்கள் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலை பஹ்ரைன் இராச்சியத்துக்கான இலங்கைத்தூதுவர் பிரதீபா சரம் ஒழுங்கமைத்திருந்தார்.

# தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவரை நியமிக்க கோரிக்கை

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

தம்பலகாமம் பிரதேசத்தில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மூவினங்களையும் சேர்ந்த சுமார் 35 ஆயிரம் மக்கள் நாளாந்தம் பயனடையும் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை காணப்படுகிறது.

மூன்று வைத்தியர்கள் பணியாற்ற வேண்டிய இந்த வைத்தியசாலையில் தற்பொழுது ஒரு வைத்தியரே கடமையில் இருக்கிறார். இதனால் வைத்தியசாலையின் செயற்பாடுகளில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாளாந்த மருந்துவ தேவைகளுக்காக வைத்தியசாலையை நாடிவரும் பயனாளிகளுக்கு இது மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

மிக அண்மைக் காலத்திலேயே இரத்த பரிசோதனை வசதி , வைத்திய நிபுணர்களின் சேவை, புதிய வைத்தியசாலை கட்டடத்துக்கான ஆரம்பப் பணி போன்ற பல முன்னேற்றங்கள் இடம் பெற்று வந்த வேளையில் இவ்வாறான வைத்தியர் பற்றாக்குறை மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கந்தளாய் பிரதேசத்தில் இருந்து திருகோணமலை நகர்ப்பகுதி வரையான 40 கிலோ மீற்றர் தூர நிலப்பரப்பில் வாழும் மக்களுக்கு உரிய மருத்துவ சேவைகளை வழங்குகின்ற ஒரே ஒரு பிரதேச வைத்தியசாலையாக இந்த வைத்தியசாலை காணப்படுகின்றது.

மேற்படி விடயங்களை கவனத்தில் கொண்டு மிக விரைவாக இந்த வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவரை பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தெபருவ மற்றும் வலஸ்முல்ல வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன

கொழும்பு, ஜூலை 21

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கிடைக்கப் பெற்ற பல மில்லியன் ரூபா மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் தெபருவ மற்றும் வலஸ்முல்ல ஆதார வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

அம்பாந்தோட்டை மாவட்ட வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலையீட்டில் இந்த உபகரணத் தொகுதி வழங்கி வைக்கப்பட்டது.

தெபருவ ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வசந்த விஜேவீர மற்றும் வலஸ்முல்ல ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வருகை தந்த எம்.எம்.சீ.கயான் ஆகியோர் குறியீட்டு ரீதியாக பிரதமரிடம் இருந்து மருத்துவ உபகரணங்களை பெற்றுக் கொண்டனர்.

முஸ்லிம் எயிட் நிறுவனத்தால் 3 கோடி ரூபா மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் அண்மையில் பிரதமரிடம் கையளிக்கப்பட்டன. அவ்வாறு கையளிக்கப்பட்ட மருத்துவ உபகரணங்களின் ஒரு தொகுதியே இவ்வாறு தெபருவ மற்றும் வலஸ்முல்ல வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

வயோதிபர்கள் மற்றும் சிறுவர்களுக்காக பயன்படுத்தக்கூடிய வென்டிலேட்டர், ஒக்சிஜன் கருவிகள், பீ.பீ.ஈ. கருவிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் அதில் உள்ளடங்குகின்றன எனப் பிரதமர் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 8 | கணிதம் | அலகு 15

### தசமங்கள் - விடைகள்

**6. தசம எண் ஒன்றினை தசம எண்ணால் பெருக்கல்**

| | | |
|---|---|---|
| 1) 3.344 | 11) 18.028 | 21) 51.68 |
| 2) 77.52 | 12) 633.68 | 22) 3.0048 |
| 3) 4.864 | 13) 89.792 | 23) 395.46 |
| 4)19.152 | 14) 700.56 | 24) 5.88 |
| 5) 6.84 | 15) 13.996 | 25) 65.446 |
| 6) 15.75 | 16) 1.672 | 26) 34.19 |
| 7) 1095.12 | 17) 22.8 | 27) 48.64 |
| 8) 495.36 | 18) 0.1324 | 28) 2.1 |
| 9) 0.422 | 19) 85.12 | 29) 18.74 |
| 10) 30.61 | 20) 230.75 | 30) 1.47 |

**7. முழு எண் ஒன்றினை தசம எண்ணால் வகுத்தல்**

| | | |
|---|---|---|
| 1) 50 | 11) 50 | 21) 500 |
| 2) 30 | 12) 20 | 22) 610 |
| 3) 10 | 13) 60 | 23) 130 |
| 4) 50 | 14) 90 | 24) 360 |
| 5) 20 | 15) 1168 | 25) 2610 |
| 6) 50 | 16) 110 | 26) 110 |
| 7) 10 | 17) 304 | 27) 250 |
| 8) 224 | 18) 120 | 28) 250 |
| 9) 50 | 19) 1210 | 29) 200 |
| 10) 20 | 20) 1110 | 30) 120 |

**8. தசம எண் ஒன்றை தசம எண்ணால் வகுத்தல்**

| | | |
|---|---|---|
| 1) 5 | 11) 6.25 | 21) 5.3 |
| 2) 3 | 12) 2 | 22) 61 |
| 3) 1 | 13) 6 | 23) 13 |
| 4) 5 | 14) 9 | 24) 3.6 |
| 5) 2 | 15) 6 | 25) 26.1 |
| 6) 5 | 16) 1.1 | 26) 1.1 |
| 7) 1 | 17) 3.04 | 27) 25 |
| 8) 23 | 18) 12 | 28) 25 |
| 9) 5 | 19) 121 | 29) 20.16 |
| 10) 2 | 20) 11.1 | 30) 1.2 |

ஆக்கம் - தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை) யா /செங்குந்த இந்துக் கல்லூரி

வழிகாட்டலும் ஆலோசனையும் : திரு ஞானமணி இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா / தேசிய கல்வியியற் கல்லூரி

காலைக்கதிர்
Kalaikkathir

# மக்களைப் பற்றிச் சிந்திக்க இந்த அரசுக்குத் தெரியாது

## கஜேந்திரன் காட்டம்



மக்களைப்பற்றி சிந்திக்கதற்போதைய அரசாங்கத்துக்கு தெரியாது என நாடாளுமன்றஉறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் உதய கம்மன்பிலவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் கொரோனா முகாமைத்துவத்தில் இந்த அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமல் கோமாளித்தனமாக நடந்துகொள்கிறது.

மேலும் துறைசார்ந்த சுகாதாரத் தரப்பினரிடம் பொறுப்பை ஒப்படைக்காமல், இனவழிப்பை மேற்கொண்ட இராணுவத்திடம் ஒப்படைத்து பொறுப்பற்ற விதமாக நடந்துகொள்கிறது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுகாதார அதிகாரிகள் பரிந்துரைத்தால் மட்டுமே பாடசாலை மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த திட்டவட்டம்

சுகாதார அதிகாரிகளின் பரிந்துரையின் அடிப்படையில் மட்டுமே பாடசாலைமாணவர்களுக்குதடுப்பூசி வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மாணவர்களுக்கு தடுப்பூசியை செலுத்துவதற்கான எந்தவொரு திட்டமும் இல்லாத நிலையில் பரீட்சையை நடத்துவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் ஆசிரியர்களுக்கு தடுப்பூசி முழுவதுமாக செலுத்தப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்னர் பாடசாலைகளை மீண்டும் திறக்க திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

கடந்த திங்கட்கிழமை நிலைவரப்படி நாடளாவிய ரீதியில் 46 ஆயிரத்து 603 ஆசிரியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.



# டெங்குக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் நிரந்தர நியமனம் வழங்கக்கோரி போராட்டம்

மட்டக்களப்பில் டெங்கு கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களாக இணைத்துக்கொள்ளப்பட்டவர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்கக் கோரி நேற்று (செவ்வாய்க்கிழமை) போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். குறித்த ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கடந்த நான்கரை ஆண்டுகளாகக் கடமையாற்றுகின்ற போதும் தமக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லையெனவும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க ஜனாதிபதி, பிரதமர் நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணிய வகையில் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். 'அரசே களநுளம்பு ஒழிப்பு உதவியாளர்களை சுகாதார திணைக்களத்திற்குள் உள்வாங்கு, அரசே வேலையை நிரந்தரமாக்கு, மாகாண சபைக்குள் உள்வாங்கி 180 நாள் வேலைத்திட்டத்தில் எங்களை நிரந்தரமாக்கு' போன்ற சுலோகங்களை தாங்கியவாறு இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# கொவிட் சிகிச்சை நிலையம் புதுக்குடியிருப்பில் திறப்பு

**பைல் இஸ்மாயில்**

கொவிட் 19 தொற்று நோயாளிகளைத் தனிமைப்படுத்தி சிகிச்சையளிக்கும் சிகிச்சை நிலையமாக மட்டக்களப்பு - புதுக்குடியிருப்பு ஆதார ஆயுர்வேத வைத்தியசாலையின் ஒரு பகுதி மாற்றியமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஶ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் கலந்துகொண்டு சிறப்பித்தார். இதன்போது, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் மற்றும் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஶ்ரீதர் ஆகியோரால் கொவிட் 19 தனிமைப்படுத்தும் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டு சிகிச்சை நிலையத்துக்குத் தேவையான பொருள்களையும் வழங்கி வைத்தனர். கொரோனாத் தொற்றுப் பாதிப்புக்குள்ளான 100 நோயாளிகளை தனிமைப்படுத்தி



சிகிச் சையளிக்கும் சிகிச்சை நிலையமாக மட்டக்களப்பு - புதுக்குடியிருப்பு தள ஆயுர்வேத வைத்தியசாலையின் ஒரு பகுதி மாற்றியமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் திருமதி ஜெயலட்சுமி பாஸ்கரன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வைத்தியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# திருமண பதிவு கட்டளை சட்டத்தின்கீழ் முஸ்லிம்கள் திருமணம் செய்ய அனுமதி

திருமண பதிவு கட்டளைச் சட்டத்தின் கீழ் முஸ்லிம்கள் திருமணம் மற்றும் விவாகரத்து செய்வதற்கான முன்மொழிவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.


அரசமைப்பின்படி எந்தவொரு குடிமகனும் இனம், மதம், மொழி, சாதி, பால் மற்றும் அரசியல் கொள்கைகள் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்ட இடமளிக்கப்படாது என அரசாங்கம் கூறியுள்ளது.

இருப்பினும், முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் பெண்களுக்கு பாகுபாடு காட்டும் குறிப்பிட்ட விதிகளை உள்ளடக்கியுள்ளது.

இத்தகைய விதிகளை சட்டத்திலிருந்து ரத்து செய்ய வேண்டியதன் அவசியத்தை முஸ்லிம் மகளிர் அமைப்புகளும் முஸ்லிம் சமூகத்தவர்கள் மற்றும் சட்டநிபுணர்களும் சுட்டிக்காட்டியிருந்த நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பொதுத் திருமண பதிவுச் சட்டத்தின் கீழ் முஸ்லிம்களை திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கும் வகையில், சிவில் சட்டக் கோவையில் திருத்தம் செய்ய நீதி அமைச்சர் அலி சப்றி முன்வைத்த திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# சேதனப் பசளை பயன்பாடு தொடர்பில் விளக்கமளிக்கும் செய்முறை பயிற்சி வேலைத்திட்டம் அம்பாறையில் ஆரம்பம்





**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

சேதனப்பசளைமற்றும்இயற்கை பீடை நாசினியை பயன்படுத்துவதன் மூலம் எதிர்கால சந்ததிகளுக்கு நஞ்சற்ற உணவு உற்பத்தியை மேற்கொள்ளும் ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்துக்கு அமைய அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்குமாகாணவிவசாயதிணைக்களத்தால் முன்னெடுக்கப் பட்ட வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் சம்மாந்துறை மேற்கு விவசாய விரிவாக்கல் பிரிவினால் மலையடிக்கிராமத்தில் விவசாய போதனாசிரியர் எம்.ரி.பஸ்லுனா தலைமையில் நடைபெற்றது.


இதன்போது மண்புழுக்களைப் பயன்படுத்தி சேதன உரம் தயாரிக்கும் முறை, குறுகிய காலத்தில் கூடுதலான உற்பத்திகளைமேற்கொள்ளும் பயிர்ச்செய்கை முறைகள் சம்பந்தமாகவும்விவசாயிகளுக்குசெய்முறை பயிற்சி நடைபெற்றது.


சேதனப் பசளையை பயன்படுத்துவதால் நாம் பல்வேறு நன்மைகளைப் பெறுகின்றோம். குறிப்பாக எமது விவசாய மண் பாதுகாக்கப்படுகிறது.

அதிகளவிலான விளைச்சலை பெறமுடியும். அது போன்று நஞ்சுத்தன்மையில்லாத உணவு உற்பத்தியை மேற்கொள்வதால் எமது எதிர்கால சந்ததிகளை ஆரோக்கியமான சமூகமாக கட்டியெழுப்ப முடியும். இன்று எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள அதிகளவான நோய்த் தாக்கத்துக்கு காரணமாக இருப்பது எமது உணவு பழக்கமும் இரசாயண பயன்பாடும் தான். இதனை விவசாயிகளான நீங்கள் மாற்றியமைக்க முன்வர வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த செயல்முறை பயிற்சி வகுப்பில் சம்மாந்துறை வலய உதவி விவசாய பணிப்பாளர் எஸ். எல். எம்.சல்மான் பாடவிதான உத்தியோகத்தர் ஜீ. குணநீதராசா, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# பேராசிரியர் சிவகடாட்சம் குடும்பத்தினரின சரவணைக் கிராமத்துக்கு உலர் உணவு





சரவணை கிராமத்தில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 40 குடும்பங்களுக்கு பேராசிரியர் பால.சிவகடாட்சம் குடும்பத்தினரின்(கனடா)நிதி அனுசரணையில் பேராசிரியர் கா.குகபாலனின் ஒழுங்குபடுத்தலில் நேற்று (செவ்வாய்க்கிழமை) உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அப்பகுதி கிராமசேவையாளர்கள், பேராசிரியர் குகபாலன், வேலணை பிரதேசசபை உறுப்பினர் சிவலிங்கம் அசோக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கிவைத்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன்

# கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை தோற்கடிப்பு

## ஆதரவு 61; எதிர்ப்பு 152



**வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நேற்று தோற்கடிக்கப்பட்டது.**

**பிரேரணைக்கு ஆதரவாக 61 வாக்குகளும், எதிராக 152 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் 91 மேலதிக வாக்குகளால் பிரேரணை மண்கவ்வியது.**


அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நேற்றுமுன்தினமும் நேற்றும் சபையில் விவாதம் நடைபெற்றது. ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் உரையாற்றினர். விவாதத்தின் முடிவில் நேற்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அரசும் அதன் தோழமைக்கட்சிகளும் கம்மன்பிலவுக்கு சார்பாக வாக்களித்தன.

அண்மையில் இலங்கையில் எரிபொருள் விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு ஆளும் தரப்புக்குள்ளேயே கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன.

இவ்வாறான பின்னணியில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி யாழ். மாநகரில் தனிநபர் போராட்டம்



(இ.கலையமுதன்)

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் தனிநபர் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக மலையகத்தைச் சேர்ந்த ஒருவர் இன்று காலை முதல் இவ்வாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

எனது தங்கையின் இறப்புக்கு நீதி வேண்டும், தவறு செய்த அனைவரையும் உடன் கைதுசெய்ய வேண்டும், ஜனாதிபதி இந்த உயிரிழப்பு தொடர்பாக நேரடியாகத் தலையிட்டு சிறுமியின் இறப்புக்கு நீதி பெற்றுத்தர வேண்டும், சிறுமியின் மரண விசாரணை அறிக்கை நேரடியாக ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட வேண் டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

# வடக்கின் பிரதம செயலாளராக வவுனியா அரச அதிபர் நியமனம்

## 9 மாகாணங்களுக்கும் சிங்களவர்கள் பதவியில்






(ந.லோகதயாளன்)

வவுனியா, ஜூலை 21

இலங்கையின் 9ஆவது மாகாணத்துக்கும் சிங்களவர் ஒருவர் பிரதம செயலாளராக நேற்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் தற்போதைய அரச அதிப ரான எஸ்.எம்.சமன் பந்துல சேனாவே வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளராகப் பணியாற்றிய அ.பத்திநாதன் கடந்த 4ஆம் திகதியுடன் ஓய்வு பெற் றுச் சென்ற நிலையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. இவ்வாறு காணப்பட்ட வெற்றிடத்துக்கு வடக்கைச் சேர்ந்த பலரும் போட்டியிட்டனர்.

அதிலும் குறிப்பாக நேர்முகத் தேர்வில் 95 புள்ளிகளைப் பெற்று ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார் இதோ திங்கட்கிழமை (கடந்த வாரம்) பதவியேற்பார் எனச் செய்திகள் வெளிவந்தபோதும் தற்போது தமிழ்பேசும் மக்கள் 90 வீதம் வாழும் மாகாணத்துக்கும் ஒரு சிங்கள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரே பிரதம செயலாளராக நியமிக்கப்படுகின்றமை வடக்கிலுள்ள அதிகாரிகள் மத்தியில் பெரும் விரக்தி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

# கல்வி அமைச்சர் பீரிஸுடனான ஆசிரியர்களின் பேச்சு தோல்வி

## தொடர்கின்றது பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற பேச்சு தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இதன்காரணமாக ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் இணையவழிக் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கிக் கொண்டுள்ள நிலையில், அதனைத் தொடர்வதற்கு ஆசிரியர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலம், சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் கடந்த 12ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, தமது கோரிக்கைகளை வலியுறுத்தி நாட்டின் சில பகுதிகளில் ஆசிரியர் சங்கங்களால் இன்றும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

# தமிழ் ஊடகத்துறையின்...

05ஆம் பக்கத் தொடர்ச்சி

"If we arrest one of them the cat will come out from the gunny bag" - என்று அது இருந்ததாக ஞாபகம் (அந்த இருவரில் ஒருவரையாவது நாம் கைது செய்தால் சாக்குப் பைக்குள் இருந்து பூனை வெளியே வரும்). அதாவது அந்த இரண்டு பேரில் ஒருவரைக் கைது செய்தால் உண்மை வெளியே வரும் என்பதை நளினமான ஆங்கிலத்தில் அப்படி எழுதியிருந்தார்கள் என்று நினைத்தேன்.

அந்த அறிக்கையைப் பார்த்ததும் நான் விறைத்துப் போனேன்.

நாத் தடுமாறியபடி *“அந்தச் சிவப்பு மோட்டார் சைக்களில் வந்தவன் நான் தான்...!”*- என்று நானாக ஒப்புக்கொண்டேன் - இனி மறைத்துப் பயனில்லை என்று கருதியவனாக.

*“எனக்குத் தெரியும். எனக்குத்தெரியும். அதனால்தான் இந்த அறிக்கையை உமக்குக் காட்டினேன். இந்தச் சம்பவத்தின் பின்னரும் கூட உம்மைக் கைது செய்து விசாரிக்க என்னிடம் அனுமதி கேட்டார்கள். நான் வழங்கவில்லை. பத்திரிகையாளன் என்ற நிலைக்கு அப்பால் போய் நீர் தப்புச் செய்யாத வரையில் உம்மைக் கைது செய்து இம்சைப்படுத்தக்கூடாது என்பதுதான் எனது நிலைப்பாடு. அந்த எல்லையைத் தாண்டாமல் பார்த்துக் கொள்ளும்”* - என்று அன்புரிமையுடன் கட்டளையிடுபவர் போல அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த யுத்தகாலப் பத்திரிகைப்பணியில் இந்தக் கட்டளையை ஒரு முக்கிய வழி காட்டலாக எடுத்து நான் நேர்மைத்திறத்துடன் - எனது பேனாவுக்கும் மனச்சாட்சிக்கும் நீதியுடையவனாக - செயற்பட்டுவந்திருக்கிறேன். உயிராபத்து நேரும் பல சமயங்களில் இந்த நேர்மைத் திறன் தான் என்னைக் காப்பாற்றியது என்பதே எனது கருத்து.

ஆனால் இப்படி என்னை விட்டுப் பிடித்தமையின் பின்னால் ஜெனரல் பலகல்லவுக்கும் ஒரு சூட்சும நோக்கம் இருந்தது என்பதைப் பின்நாளில்தான் நான் அறிய முடிந்தது.

மேற்படி சந்திப்பு முடிந்து சில மாதங்களின் பின்னர் அந்த விடயம் கட்ட விழ்ந்தது.

- இப்படி என் புத்தகத்தில் எழுதி இருந்தேன். இவ்விடயங்கள் பற்றிய மேலதிக விவரங்கள் பலவற்றை நீங்கள் அதில் பார்க்கலாம்.

பின்னாட்களில் யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்களை இயங்கவிடாமல் புலிகள் தடுத்த போதும் புங்குடுதீவில் நிலைகொண்டிருந்த புலிகளிடம் பத்திரிகையாளனான என்னைத் தூதுவராக அனுப்பி நீதிமன்றச் செயற்பாடுகள் மீதான அத்தடையை நீக்கி, நீதிமன்றங்களை சுயாதீனமாக இயங்க வைக்கும் ஏற்பாட்டை ஜெனரல் பலகல்ல உறுதி செய்துகொண்டார். அவை பற்றிய விடயங்களும் என் புத்தகத்தில் விவரமாகப் பதிவாகியுள்ளன.

புலிகளுடன் போரிட்ட ஓர் இராணுவத் தளபதி, அதே புலிகளுடன் பழகவும் பேசவும் ஊடாடவும் என்னை அனுமதித்து, அதற்கு ஆதரவு தந்து, ஆலோசனை வழங்கி, நின்றமை கூட ஒருவகையில் முரணிலை உபதேசம்தானே!

இதுவும் எஸ்.டி.சிவநாயகம் ஐயாவிடம் நான் முதலில் பெற்ற ஒரு முரணிலை உபதேசத்தின் வகையைச் சேர்ந்ததுதான்.

இனி ஒரு சிக்கலான - நாடாளுமன்றம் மற்றும் அரசமைப்புத் தொடர்பச்க நான் எழுதிய செய்தியை 'தினபதி' பிரசுரித்ததால் ஏற்பட்ட நெருக்கடியையும், அது குறித்து நான் அறிந்து கொண்டு நான் அரண்டு, மருண்ட போதும் ஆசிரியர் சிவநாயகம் ஐயா எப்படி ஊக்கம் தந்தார் என்பதையும் நாளை பார்ப்போம்.

சிவநாயகம் ஐயா பற்றிய இந்த தொடரின் இன்றைய அங்கத்தில் அவர் குறித்து அதிகம் குறிப்பிட முடியாமல் போய் விட்டது - சிவநாயகம் ஐயா போல இராணுவத் தளபதியும் வழங்கிய முரணிலை உபதேசம் பற்றி எழுத வேண்டி வந்தமையால். அதற்காக வாசகர்களிடம் மன்னிப்புக் கோருகிறேன்.

(வளரும்.....)

காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க சர்வதேச அழுத்தம் அவசியம் - சுகாஸ்



பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு சர்வதேசத்தினுடைய அழுத்தம் மிக முக்கியமானது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும், வழக்கறிஞருமான கனகரத்தினம் சுகாஸ் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடை சட்டம் தொடர்பாகக் கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் -

இலங்கையைப் பொறுத்த வரை பயங்கர வாதத் தடைச் சட்டம் என்பது ஒரு குழப்பகரமான வியாக்கியானங்களைக் கொண்ட ஒரு சட்ட ஏற்பாடாகவே காணப்படுகின்றது.

இலங்கை அரசினுடைய அரசியல் கொள்கைகளுக்கு மாறான நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தவர்களை அடக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட ஒரு முக்கியமான கருவியாகத்தான் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பார்க்க முடிகிறது.

ஏனென்றால், இலங்கையிலே நடைபெற்றது ஒரு பயங்கரவாதம் கிடையாது. அது ஓர் இனம், தன்னுடைய விடுதலையை வலியுறுத்தி சர்வதேச சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் விடுதலைக்காகச் செயல்படுவது பயங்கரவாதம் ஆகாது.

அந்தவகையில் இலங்கையிலே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள், அவர்கள் கொண்டிருந்த அரசியல் நிலைப்பாடுகள் காரணமாகவே கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை போன்ற பன்னாட்டு மன்றங்களின் ஊடாக வழங்கப்படுகின்ற அழுத்தங்களின் மூலம் இதனை நீக்குவதுதான் ஒரே தீர்வு.

ஆகவே, இந்தப் பயங்கர வாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு ஈழத் தமிழர்களும், உலகத் தமிழர்களும் ஒன்றுபட்டு குரல் கொடுப்பது மட்டும் தீர்வைத் தராது. அதையும் தாண்டி சர்வதேசத்தினுடைய அழுத்தம் மிக முக்கியமானது. - எனத் தெரிவித்துள்ளார்.

## கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் மட்டு. வாழைச்சேனையில் கைது

மட்டக்களப்பு - வாழைச்சேனை பகுதியில் ஒரு கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் கஞ்சா வியாபாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை கடந்த திங்கட்கிழமை இரவு இராணுவ புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தமையுடன், ஒட்டோ ஒன்றும் மீட்கப்பட் டுள்ளதாக வாழைச்சேனை பொலி ஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து கோழிக்கடை வீதியில் பயணித்த வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே அவர் கைது



செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எசல பெரஹறரவில் கலந்து கொண்ட நடனக் குழுவில் 15 பேருக்கு கொவிட்

ருஹூனு மகா கதிர்காம தேவாலயத்தில் இடம்பெற்ற எசல பெரஹறரவில் கலந்துகொண்ட நடனக் குழுக்களில் 15 பேருக்கு கொவிட் தொற்று இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடனக் குழுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மேற்படி தொற்றாளர்கள் இனங் காணப்பட் டுள்ளனர். குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பின்னர், ஊர்வலத்தில் இருந்து சவுக்கு மற்றும் தீப்பந்து உள்ளிட்ட 4 நடன குழுக்கள் இருந்து அகற்றப்பட்டன.

ருஹூனு கதிர்காமம் எசல பெரஹறரவின் 9 ஆவது பெரஹறவீதி உலா வந்தது.

அதன்படி, பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு முன்னுரிமை அளித்து, பெரஹர இடம்பெற்ற போதிலும், குறைந்த எண்ணிக்கையிலான நடனக் குழுக்களைச் சேர்க்க சுகாதாரத் பிரிவினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

## தெற்காசியாவிலேயே விரைவாகத் தடுப்பூசி நடவடிக்கை மேற்கொள்ளும் நாடு இலங்கை

### நாமல் பெருமிதம்



கொழும்பு, ஜூலை 21

தெற்காசியாவிலேயே விரைவாக தடுப்பூசி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நாடு இலங்கையே என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத் துறையில் ஈடுபடுகின்றவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக் கைகளை பார்வையிட்டபோது அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

சுற்றுலாத் துறை உள்ளிட்ட பொருளாதார மையங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு - ஷாங்காய் விமான சேவைகள் இரு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டன

கொழும்பு, ஜூலை 21

கொழும்பில் இருந்து ஷாங்காய் செல்லும் சீனா ஈஸ்டர்ன் எயார்லைன்ஸின் விமான சேவைகள் ஜூலை 26 முதல் இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஜூலை 6 ஆம் திகதி கொழும்பிலிருந்து தென்மேற்கு சீனாவின் யுன்னான் மாகாணத்திற்கு சென்ற எம்.யு. 714 என்ற விமானத்தில் சென்ற ஆறு பயணிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இந்நிலையில் கொழும்பு - ஷாங்காய் விமான சேவைகள் இடைநிறுத்தப்படும் அதே நேரத்தில் கொழும்பு - குன்மிங் விமான சேவைகளும் அடுத்த வாரம் முதல் இரத்து செய்யப்படும் என அந்நாட்டு சிவில் விமான போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.








விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.07.2021 இல் வெளியிடப்பெற்றது.